வானவில்
VAANAVIL
ISSUE – 63 MARCH 2016
இதழ் – 63 பங்குனி 2016

# இந்தியா இலங்கையின் நட்பு நாடா அல்லது நவ குடியேற்றவாத நாடா?



இந்தியாவின் இந்துத்துவ வலதுசாரி அரசாங்கமும், இலங்கையின் மேற்கத்தைய சார்பு வலதுசாரி அரசாங்கமும் இரு நாடுகளுக்கிடையிலும் செய்து கொள்ள உத்தேசித்துள்ள 'பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான ஒப்பந்தம்' (Economic and Technical Cooperation Agreement - ECTA) என்ற பெயரிலான உடன்படிக்கைக்கு இலங்கையின் தேசப்பற்றுள்ள அரசியல் சக்திகள் மத்தியிலும், மக்களிடத்திலும் கடுமையான எதிர்ப்பு எழுந்துள்ளது.

இந்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டால். இந்தியாவின் தொழில்நுட்ப வல்லுனர்கள் இலங்கையின் தொழில்நுட்ப, விஞ்ஞானத்துறையில் ஆதிக்கம் செலுத்தவும், நமது பொருளாதாரத்தை இந்தியா கட்டுப்படுத்தவுமான சூழல் நிச்சயம் ஏற்படும் என்ற காரணத்தாலேயே, இலங்கையர்களில் கணிசமானோர் இந்த உடன்படிக்கையை எதிர்க்கின்றனர்.

ஆனால், மக்களின் கடுமையான எதிர்ப்பையும் மீறி, தற்போதைய அரசாங்கத்தின் ஐக்கிய தேசியக் கட்சிப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, "என்ன எதிர்ப்பு வந்தாலும் ஒப்பந்தத்தை நிறைவேற்றியே தீருவேன்" என ஒற்றைக்காலில் நிற்கிறார். மறுபக்கத்தில், நிறைவேற்று அதிகாரத்தின் பல அம்சங்களை இன்னமும் தனது கையில் வைத்திருப்பவரும், அரசுடன் பங்காளியாக இணைந்திருக்கும் ஒருபகுதி சிறீலங்கா சுதந்திரக் கட்சி அணியினரின் தலைவருமான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இந்த ஒப்பந்தம் பற்றி வாய்திறக்காமல் மௌனமாக இருக்கிறார்.

இன்னொரு பக்கத்தில், எடுத்ததிற்கெல்லாம் இந்தியக் காய்ச்சலால் அவதிப்படும் ஜே.வி.பி., இந்த ஒப்பந்த விடயத்தில் மிகவும் அடக்கி வாசிக்கின்றனர். இவர்கள்தான், கடந்த அரசாங்க காலத்தில் இந்தியாவுடன் 'விசாலமான பொருளாதார பங்காளி ஒப்பந்தம்' (Comprehensive Economic Partnership Agreemenet - CEPA) என்ற பெயரிலான ஒப்பந்தம் ஒன்றைச் செய்வதற்கு முயற்சி எடுத்தபோது, வானத்துக்கும் பூமிக்கும் இடையில் துள்ளிக்குதித்து எதிர்ப்பை வெளியிட்ட இலங்கையின் முன்னாள் 'தேசப்பற்றாளர்கள்' (தமது கட்சியிலிருந்து பிரிந்து சென்று தேசிய சுதந்திர முன்னணி என்ற தனிக்கட்சி அமைத்த விமல் வீரவன்சவையும், அதேபோல பிரிந்து சென்று முன்னிலை சோசலிசக் கட்சி என்ற கட்சியை அமைத்த குமார் குணரட்ணத்தையும் இன்றைய அரசைக் கொண்டு பழிவாங்குவதற்காக அதன் எல்லா நடவடிக்கைகளையும் ஜே.வி.பி. நிபந்தனையின்றி ஆதரித்து நிற்பது ஆச்சரியமானது அல்ல).

இலங்கையின் இன்றைய அரசு, இந்தியாவுடன் பொருளாதார — தொழில்நுட்ப ஒப்பந்தத்தை மட்டுமின்றி, வேறு பல ஒப்பந்தங்களையும் (சில இன்னமும் பகிரங்கப்படுத்தப்படவில்லை) செய்வதற்கு முனைப்புடன் செயல்பட்டு வருகின்றது. ஏற்கெனவே இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பலாலி விமான நிலையத்தையும், காங்கேசன்துறை துறைமுகத்தையும் புனரமைக்கும் பணிகள் இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

தற்போது புதிதாக பல ஒப்பந்தங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. அதில் ஒன்று, இலங்கையில் அரசாங்க அம்புலன்ஸ் சேவை சிறப்பாகச் செயலாற்றும் சூழ்நிலையில், அதற்கும் மேலாக தேவையேற்பட்டால், தனியார்துறையினரும் தமது சேவையைச் சிறப்பாக வழங்கத் தயாராக உள்ள

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க…

நூறு சிந்தனை மலரட்டும்

# ஆட்சி மாற்றமும் ஊடக சுதந்திரமும்

இலங்கையின் தற்போதைய ஆட்சியாளர்கள், முன்னைய ஆட்சியாளர்கள் மீது வைத்த முக்கியமான குற்றச்சாட்டுகளில் ஒன்று, முன்னைய ஆட்சியில் ஊடக சுதந்திரம் முழுமையாக இருக்கவில்லை என்பதே. ஆனால் தற்போதைய ஆட்சியாளர்கள் அண்மைக்காலங்களில் ஊடகங்கள் மீது கடுஞ்சினங்கொண்டு அதனை வெளிப்படுத்தும் விதத்தினைப் பார்த்தால், முன்னைய ஆட்சியின் ஊடக சுதந்திரம் பற்றி கதைப்பதற்கு இவர்கள் அருகதையே இல்லாதவர்களாக தெரிகிறார்கள். அத்துடன் இவர்கள் குற்றஞ்சாட்டும் ஊடகங்கள், முன்னைய சர்வாதிகார ஆட்சிக்கு துணைபோனவை எனவும் இனவாதத்தினை தூண்டுகின்றன எனவும் கூறி இவர்கள் தங்கள் ஆவேசமான பகிரங்கப் பேச்சுகளுக்கு நியாயம் கற்பிக்கவும் முயல்கிறார்கள்.

இவ்வருடத்தில் மாத்திரம் இலங்கையின் பிரதமர், ரணில் விக்கிரமசிங்க குறைந்தது மூன்று தடவைகளாவது ஊடகங்களைக் கடிந்தும் எச்சரிக்கை செய்தும் விடுத்த செய்திகள் ஊடகங்களிலேயே வெளிவந்துள்ளன. இதேவேளை, இம்மாதம் உயர் கல்வி அமைச்சர், லக்ஷ்மன் கிரியெல்ல செய்தியாளர்களை தூற்றியிருக்கிறார். ஆனால் உச்சக்கட்டமாக 16.03.2016 இல் துறைமுக அதிகார சபையின் தலைவர், தம்மிக்க ரணதுங்கவோ உயர் நீதிமன்றத்தில் வைத்து ஊடகவியலாளர்களை தாக்குவதற்கு முயற்சித்துள்ளார். மேலும் பாராளுமன்ற சீர்திருத்த மற்றும் பொதுசன ஊடக அமைச்சு இலங்கையிலிருந்து இயங்கும் எல்லா இணையத்தளங்களும் இம்மாதம் 31ந் திகதிக்கு முன்னதாக பதிவு செய்து கொள்ள வேண்டுமென்று அறிவிப்பு ஒன்றினையும் விடுத்துள்ளது.

ஊடகங்களுக்கு முழுச்சுதந்திரமும் வழங்குவோம் என்று கூறி பதவிக்கு வந்த இந்த அரசாங்கம், முன்னைய அரசினால் தடைவிதிக்கப்பட்டிருந்த உள்நாட்டிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் இயங்கும் சில இணையத்தளங்களின் மீதான தடையை நீக்கியது, காணாமல்போன, கொலை செய்யப்பட்ட ஊடகவியலார்கள் தொடர்பான விசாரணைகளையும் தொடங்கியது. ஆனால் தற்போதைய இலங்கையின் பிரதமர், ரணில் விக்கிரமசிங்க உள்நாட்டிலிருந்து இயங்கும் 'டெய்லி மிரர்' போன்ற பத்திரிகையை குறியாய் வைத்து தாக்குவதைப் பார்த்தால், இந்த நடவடிக்கைகள் எல்லாமே வெறும் கண்துடைப்புப் போன்றே தெரிகின்றது.

20 வருடங்களாக ஆட்சி புரிந்த முன்னைய ஆட்சியாளர்களைத் தோற்கடித்ததில் ஊடகங்களே பிரதான பாத்திரத்தை வகித்தன என்பதை எவரும் மறுக்க முடியாது. குடும்ப ஆட்சீ, எதேச்சதிகார அரசு, ஊழல்வாதிகள், சிறுபான்மையினங்களின் விரோதிகள் போர்க்குற்றவாளிகள் என்றெல்லாம் தேர்தல் காலங்களில், நிறுவனமயப்பட்ட பெரும்பாலான தமிழ், சிங்கள, ஆங்கில ஊடகங்களிலிருந்து ஒரு சில தனிநபர்களினால் நடாத்தப்படும் சிறிய வாசகர் பரப்பைக் கொண்ட இணையத்தளங்கள் வரை (ஆனால் இன்று இவ்வாறான இணையத்தளங்களே பதிவு செய்யப்பட்டு அரசின் கண்காணிப்புக்கு உட்பட வேண்டிய நிலை!) வரிந்து கட்டிக்கொண்டு செய்திகளை வெளியிட்டார்கள். அதாவது 'ஆட்சிமாற்றம்' என்பது தாரகமந்திரமாக ஒலித்தது.

இலங்கையில் நல்லாட்சி செய்யப்போவதாகக் கூறி பதவிக்கு வந்த தற்போதைய ஜனாதிபதி மற்றும் அரசாங்கம் மிகவும் சோதனையான காலகட்டத்தில் இருப்பது எல்லோருக்கும் தெரிந்ததே. ஜனநாயக ரீதியாக பெரும்பான்மையான மக்களால் தெரிவு செய்யப்பட்ட போதும் மக்களுக்கு வழங்கிய பல வாக்குறுதிகளை (உதாரணம்: ஊடக சுதந்திரம்) முழுமையாக நிறைவேற்ற முடியாமல் திண்டாடி வருகின்றனர். இதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வலதுசாரிப் பிரிவும் வலதுசாரிக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் சிம்மாசனத்தில் அமர்வதற்காக ஏற்படுத்திக் கொண்ட சந்தர்ப்பவாதக் கூட்டணியும் ஒரு காரணமாகும். இந்தக் கூட்டணிக்கு ஆட்சி அதிகாரத்தில் அமர வேண்டுமென்ற அவா மாத்திரமே இருந்தது. ஆனால் உள்நாட்டு யுத்தம் முடிந்து 6 வருடங்களின் பின்னர் அருமையானதொரு காலகட்டத்தில் இருந்த நாட்டினை அபிவிருத்தி செய்து, முழுமக்களினதும் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்த வேண்டுமென்ற எண்ணம் துளியளவும் இருக்கவில்லை. இப்போதும் கூட அதற்கான ஆக்கபூர்வமான எந்த முயற்சியும் எடுப்பதாகத் தெரியவில்லை.

இந்த ஆட்சியின் சில இரகசிய முன்னெடுப்புகள், (தமிழ் தேசியக்கூட்டமைப்புடனான உடன்படிக்கைகள், புதிய அரசியலமைப்பு) பழிவாங்கல் அரசியல், ஒன்றிணைந்த எதிர்கட்சிகளின் செயற்பாடுகள் போன்றவைகள் தொடர்பாக ஊடகங்கள் வெளியிட்ட செய்திகளே, பிரதானமாக ஆட்சியாளர்களின் ஊடக சுதந்திர முகமூடியை கிழித்தெறிய உதவியது. ஆனால் அதிகாரத்திலுள்ளவர்கள் எப்படித் தாறுமாறாக நடந்தாலும், ஆட்சி மோகங்கொண்டவர்களினதும் அந்நிய சக்திகளினதும் பணத்திற்கு விலைபோய் ஆட்சிமாற்றங்கோரி வாய் கிழியக்கத்திய ஊடகங்களோ அல்லது ஊடகவியலாளர்களோ திருந்துவார்களென்று கூறமுடியாது.

---

## வானவில்

**தொடர்பு முகவரி:** 'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
sunvaanavil@gmail.com

இதுவரையில் வெளிவந்த வானவில் இதழ்களை **http://manikkural.wordpress.com/** என்ற இணையத்தள முகவரியில் வாசிக்கலாம்.

# வட்டுக்கோட்டைத் தீர்மானங்களைக் கைவிட்ட தமிழ் மக்கள் பேரவை!

**வ**ட மாகாண முதலமைச்சர் திரு.சி.வி.விக்னேஸ்வரன் இணைத்தலைமை வழங்கும் 'தமிழ் மக்கள் பேரவை' புதிய அரசியல் அமைப்புக்கான தனது யோசனைகளைப் பகிரங்கப்படுத்தி இருக்கிறது. அந்த யோசனைகள் அடங்கிய நீண்ட அறிக்கையின் சாராம்சம், வடக்கு கிழக்கில் வாழ்கின்ற தமிழ் மக்களுக்கு சமஸ்டி முறையிலான தீர்வு வழங்கப்பட வேண்டும் என்பதுதான். சமஸ்டிக் கோரிக்கை என்பது தமிழரசுக் கட்சியினால் 57 வருடங்களுக்கு முன்னர் முன்வைக்கப்பட்ட கோரிக்கை என்பது இன்று அரசியலில் ஈடுபட்டிருக்கும் பலருக்குத் தெரியுமோ என்னவோ?

ஆனால், விக்னேஸ்வரனை முதலமைச்சராக்கிய, தமிழரசுக் கட்சியை பிரதான அங்கத்துவக் கட்சியாகக் கொண்டிருக்கிற தமிழ் தேசியக் கூட்டமைப்பு புதிய அரசியல் அமைப்பு சம்பந்தமாக இதுவரை தனது யோசனை எதையும் முன்வைக்கவில்லை. தற்போதைய மைத்திரி – ரணில் அரசுடன் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஒட்டி உறவாடி வருவதால், 'அரசு எதைத் தந்தாலும் ஏற்றுக் கொள்வோம், அல்லது ஒன்றையும் தராவிட்டாலும் பரவாயில்லை' என்று கருதி வாளாவிருக்கிறார்களோ தெரியவில்லை.

1972 மே 04ஆம் திகதி வல்வெட்டித்துறையில் தமிழ் அரசியல் கட்சிகள் கூடி தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியை (TULF) உருவாக்கிய போது, தமிழரசுக் கட்சி அதில் முக்கிய பங்கு வகித்தது. பின்னர் அந்த முன்னணி 1976இல் வட்டுக்கோட்டையில் மாநாடு கூடி தமிழ் மக்களின் பிரச்சினைக்கு 'தமிழ் ஈழம்' தான் ஒரேயொரு முடிந்த முடிபு எனப் பிரகடனம் செய்தது. அந்தக் கோரிக்கையை தமிழ் மக்கள் மத்தியிலான சர்வசன வாக்கெடுப்பாக அறிவித்து, தமிழர் விடுதலைக் கூட்டணி என இன்று அழைக்கப்படும் அந்த முன்னணி 1977 பொதுத் தேர்தலில் போட்டியிட்டு வடக்கு கிழக்கில் அமோக வெற்றி பெற்றது.

இருந்தும் அத்தேர்தலில் ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அமோக வெற்றி பெற்று ஆட்சி அமைத்ததால், தமிழர் விடுதலைக் கூட்டணி எதிர்க்கட்சி அந்தஸ்துப் பெற்றிருந்த போதும், இன்று எதிர்க்கட்சி அந்தஸ்து பெற்றிருந்த போதும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமது அரசியல் சகபாடியான மைத்திரி – ரணில் அரசைப் பாதுகாப்பதற்காக நடந்து கொள்வதைப் போல, அன்றைய ஜே.ஆர். அரசைப் பாதுகாப்பதற்காக தமிழ் ஈழக் கோரிக்கையை கைவிட்டது. ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தமிழ் ஈழக் கோரிக்கையை நம்பிய தமிழ் இளைஞர்கள் அக்கோரிக்கையை நிறைவேற்றுவதற்காக ஆயுதம் ஏந்திப் போராடி பெரும் அழிவைச் சந்தித்தனர்.

**பாலா**

அதன் பின்னர் தமிழர் கூட்டணியை உத்தியோகபூர்வமாக வைத்திருக்கும் வீ.ஆனந்தசங்கரியும் சரி, இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ் தேசியக் கூட்டமைப்பும் (தமிழரசுக் கட்சியும்) சரி, ஐக்கிய இலங்கைக்குள் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் எனக் கூறி வருகின்றனரேயொழிய, தமது முன்னைய தமிழ் ஈழக் கோரிக்கையைக் கைவிட்டதாக இன்றுவரை அறிவிக்காமல் தந்திரமாக இருந்து வருகின்றனர். (தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகமும் தனது மாநில சுயாட்சிக் கோரிக்கையை கைவிட்டதாக அறிவிக்காமல் இப்படித்தான் கபட நாடகம் ஆடி வருகிறது) ஐக்கிய இலங்கையை ஏற்றுக் கொண்டால், தமிழ் ஈழக் கோரிக்கையை கைவிட்டதாக அறிவிக்கலாம்தானே? ஏன் இரட்டை வேடம் போடுவான்?




ஆனால் வட மாகாண முதலமைச்சர் இந்த விடயத்தில் சரியோ பிழையோ தமிழ் ஈழத்தைக் கைவிட்டதாக உணர்த்திவிட்டார். அவர் தனது தமிழ் மக்கள் பேரவையின் தீர்வு ஆலோசனையாக சமஸ்டிக் கொள்கையை (அது சரியா பிழையா என்பது தனியாக ஆராயப்பட வேண்டியது) முன்வைத்ததின் மூலம் தமிழ் ஈழம் என்ற கொள்கையை நிராகரித்திருக்கிறார். அது ஒரு வகையில் நேர்மையான ஒரு செயல்.

ஆனால் அதேநேரத்தில் தமிழ் மக்கள் பேரவையின் அரசியல் சித்தாந்த நிலைப்பாடு என்ன என்பதையும் விக்னேஸ்வரன் அணியினர் அம்பலமாக்கிவிட்டனர். வட்டுக்கோட்டை தமிழ் ஈழத் தீர்மானத்தை நிராகரித்த விக்னேஸ்வரன் குழுவினர், வட்டுக்கோட்டை மாநாட்டில் எடுத்த இன்னொரு தீர்மானத்தையும் நிராகரித்துள்ளனர்.

அதாவது, வட்டுக்கோட்டையில்

தமிழீழத் தீர்மானத்தை முன்மொழிந்த தமிழர் விடுதலைக் கூட்டணி, தனது தீர்மானத்தில் எதிர்காலத்தில் தாம் அமைக்கப்போகும் தமிழீழ அரசு, 'சமதர்ம தமிழீழ குடியரசு' ஆக இருக்கும் எனப் பிரகடனம் செய்திருந்தது. அந்தக் கருத்தையே பின்னர் தமிழீழத்துக்காகப் போராடிய சில ஆயுதப் போராட்ட இயக்கங்கள், 'எமது கொள்கை சோசலிச தமிழ் ஈழம் அமைப்பது' எனப் பிரகடனம் செய்தன.

ஆனால் இப்பொழுது விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் பேரவை தமது புதிய அரசியல் அமைப்பு யோசனைகளில் இலங்கை பிரித்தானியா பின்பற்றும் வெஸ்ற்மினிஸ்ரர் (ஏற்கெனவே ஏறக்குறைய அதுதான் நடைமுறையில் இருக்கிறது) அரசியல் அமைப்பைக் கொண்டிருக்க வேண்டும் என்றும், தேர்தல் முறையைப் பொறுத்தவரையில் ஜேர்மனியின் முறையை ஒத்திருக்க வேண்டும் என்றும் கூறியிருக்கிறது. இந்த ஆலோசனைகளைப் பார்த்து தமிழ் மக்களில் யாராவது கவலைப்படுவார்களோ என்னவோ?

ஏனெனில், பிரித்தானிய வெஸ்ற்மினிஸ்ரர் முறையினால் பிரித்தானியாவிலேயே அயர்லாந்து, ஸ்கொட்லாந்து சிறுபான்மைத் தேசிய இனங்களின் பிரச்சினையை இன்றுவரை தீர்த்து வைக்க முடியவில்லை. அதுமட்டுமின்றி, இந்த முறையைப் பின்பற்றிய இலங்கையிலும் இந்த அரசமைப்பு முறையினால் இனப்பிரச்சினை தீராதது மட்டுமின்றி, அது மேலும் சிக்லாகியும் இருக்கிறது. அப்படியிருக்க விக்னேஸ்வரன் குழுவினர் வெஸ்ற்மினிஸ்ரர் முறையைச் சிபார்சு செய்தது அவர்களின் சிந்தனைக் குறைவினாலா அல்லது பிரித்தானிய ஏகாதிபத்திய விசுவாசத்தினாலா?

உலகிலேயே சிறுபான்மைத் தேசிய இனங்களின் பிரச்சினையை முதன்முதலாக வெற்றிகரமாகத் தீர்த்து, உலகிற்கே முன்னோடியாக அமைந்தது மாமேதை லெனின் தலைமையில் உருவாக்கப்பட்ட சோசலிச சோவியத் யூனியன்தான். அது ஏன் மெத்தப் படித்த இந்த விக்னேஸ்வரன் குழுவினரின் கண்களுக்குத் தெரியாமல் போனது என்று தெரியவில்லை.

இன்று பலர் பிற்போக்கான, ஐக்கிய தேசியக் கட்சி சார்பான, ஏகாதிபத்திய விசுவாசம் கொண்ட தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு மாற்றாக விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் பேரவையைப் பார்க்கின்றனர். அப்படியானவர்களுக்கு தமிழ் மக்கள் பேரவையின் முதலாளித்துவ சார்பு அரசியல் அமைப்புச் யோசனைகள் கண்ணைத் திறந்து வைக்க வேண்டும் என்பதே எமது விருப்பமாகும்.

*

# மார்க்ஸ் உறங்கும் கல்லறைத் தோட்டம்

**—ஷங்கர்**

உலகிலேயே அழகும், அமைதியும், ஏகாந்தமும் நிலவும் தோட்டங்களில் ஒன்றாக இது இருக்கக் கூடும். நூற்றாண்டுகளைக் கடந்த மரங்கள் சூழ்ந்த, மலைப்பாங்கான சரிவுகளில், புதிர் சுற்றுகளைப் போலச் சுழலும் பாதைகள் நிறைந்த இடம் இது. உலகையே மாற்றிய அறிஞர்கள் இங்கே இறுதித் துயில் கொள்கிறார்கள். வடக்கு லண்டன் பகுதியில் 1839இல் திறக்கப்பட்ட கல்லறைத் தோட்டம் இது. கிழக்கு, (East *Cemetery)* மேற்கு (West *Cemetery)* என்று இரண்டு பகுதிகளைக் கொண்ட இத்தோட்டம் பாரம்பரிய இயற்கைப் பூங்காவாகவும் போற்றிப் பராமரிக்கப்படுகிறது.

இதன் கிழக்குப் பகுதியில்தான் உலக மக்களின் சிந்தனைப் போக்கையே மாற்றிய பேரறிஞர் கார்ல் மார்க்ஸ் துயில்கிறார். நாவலாசிரியர் ஜார்ஜ் எலியட், வெர்ஜினியா வுல்ஃபின் தந்தை விமர்சகர் லெஸ்லி ஸ்டீபன், விஞ்ஞானி மைக்கேல் பாரடே, சமீபத்தில் காலமான வரலாற்றறிஞர் எரிக் ஹாப்ஸ்பாம் போன்றவர்களின் கல்லறைகள் இங்குதான் உள்ளன.


மரணம் எவ்வளவு மதிப்புள்ளது என்பதைப் பார்க்க ஒருவர் நிச்சயம் ஹைகேட்டுக்கு வர வேண்டும். கோத்திக் பாணியில் அழகுற வடிவமைக்கப்பட்ட நினைவுக் கற்களும், சமாதிகளும் இந்த இடத்தை ஒரு அருங்காட்சியகமாக மாற்றியிருக்கின்றன.

மரங்கள், குற்றுச் செடிகள், காட்டுப் பூக்கள் புதர்களாக அடந்திருக்கும் இப்பகுதி பறவைகள் மற்றும் நரி போன்ற சிறிய பிராணிகளின் இருப்பிடமாகவும் உள்ளது.

ஹைகேட் தோட்டத்தின் நாயகர் என்றால் அவர் கார்ல் மார்க்ஸ்தான். கார்ல் மார்க்சின் கல்லறையைப் பார்க்க உலகம் முழுவதும் இருந்து பயணிகள் தினந்தோறும் வருகின்றனர். பார்வைக்குக் கட்டணமும் உண்டு.

அழகிய பளிங்குப் பீடத்தின் மீது மார்க்சின் தாடியுள்ள பெரிய முகம் நம்மைப் பார்த்துக்கொண்டிருக்கிறது.

அந்த நினைவிடத்தில் கம்யூனிஸ்ட் அறிக்கையின் புகழ்பெற்ற **'உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்'** (Workers of All Lands Unite) என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. அதற்குக்




கீழே மார்க்ஸ் சொன்ன இன்னொரு வாசகமும் பொறிக்கப்பட்டுள்ளது.

**"தத்துவவாதிகள் பல்வேறு விதங்களில் இந்த உலகத்தைப் பற்றிய விளக்கத்தை மட்டுமே சொல்லியிருக்கிறார்கள் என்றாலும், அதை மாற்றுவதுதான் முக்கியமான விஷயம்."**

பேதங்கள், அநீதிகள் அதிகமாகிவரும், மனித குலத்தின் விடுதலைக்கு சாத்தியங்கள் மீதம் இருக்கிறதா என்பதை இன்னும் யோசித்துக்கொண்டிருப்பதைப் போல, ஹைகேட் (Highgate) தோட்டத்தில் உள்ள கார்ல் மார்க்சின் உருவச் சிலை வீற்றிருக்கிறது.

நன்றி: தமிழ் இந்து

# ஜெயலலிதா ஆட்சியின் 'மகிமைகள்' குறித்து அவரது கட்சி எம்.எல்.ஏ-வே புட்டு வைக்கிறார்!

நீண்டகால காங்கிரஸ் கட்சி உறுப்பினரான பழ.கருப்பையா, வெளிப்படையாகவும் ஓரளவு நேர்மையாகவும் பேசும் அரசியல்வாதி. கடந்த தேர்தலில் அ.தி.மு.க-வில் இணைந்து சட்டமன்ற உறுப்பினரானார். அக்கட்சி ஆட்சியில் தனக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவங்கள் காரணமாக சமீபத்தில் நடந்த 'துக்ளக்' பத்திரிகை ஆண்டுவிழாவில், அ.தி.மு.க ஆட்சியை கடுமையாக விமர்ச்சித்துப் பேசினார். அதன் காரணமாக அக்கட்சித் தொண்டர்களால் அவரது வீடு தாக்கப்பட்டது.

அதன்பின்னர் அவரது நிலைப்பாடு குறித்து 'ஆனந்தவிகடன்' வார இதழ் அவரைப் பேட்டி கண்டது. அதிலிருந்து சில பகுதிகள் இதோ:

**திடீரென உங்கள் கட்சியையே விமர்சனம் செய்ய ஆரம்பித்து விட்டீர்கள். அதுவும் இவ்வளவு கடுமையான விமர்சனம். கட்சித் தலைமையிலிருந்து ஏதாவது விளக்கம் கேட்டார்களா?**

"அவர்கள் எதற்கு விளக்கம் கேட்க வேண்டும். இதை நான் இன்று நேற்று பேசவில்லை. சட்டமன்றத்திலேயே எது உண்மையோ அதைப் பேசியிருக்கிறேன். தொடர்ந்து பல கூட்டங்களிலும் பேசி வருகிறேன். 'துக்ளக்' பத்தரிகையின் ஆண்டு விழாவின் தலைப்பு 'இன்றைய அரசியல் நிலை'. எனவே, இன்றைய அரசியல் நிலை எப்படி இருக்கிறது எனப் பேசினேன்".

**அப்படியானால் அதிமுக-வைப் பற்றி உங்கள் மதிப்பீடு என்ன?**

"ஒவ்வொரு தொண்டனின் திருமண வீட்டுக்கும் போய் மொய் எழுத வேண்டும். யாராவது இறந்துவிட்டால் அங்கே சென்று அவர்களுக்குத் தேவையானதைச் செய்ய வேண்டும். பிறகு, இலவசப் பொருட்கள் கொடுக்கும் நிகழ்ச்சிகளில் முண்டியடித்துக் கொண்டு பங்குபெற வேண்டும். முக்கியமாக, புகைப்படத்தில் நம் முகமும் தெரிய வேண்டும். அந்தப் படத்தை கட்சிப் பத்திரிகைகளிலும் வரவழைக்க வேண்டும். இதுதான் தொலைக்காட்சியிலும்



அரசியல்....கட்சிக் கொடி போட்ட கரைவேட்டி கட்டுவது, வளைந்து நெளிந்து கும்பிடுவது, சட்டைப்பையில் தலைவரின் புகைப்படத்தை வெளியில் தெரியும்படியாக வைத்துக் கொள்வது... இவைதான் அரசியல்வாதியின் அடையாளங்கள்.

கொள்ளையடிப்பது ஒன்றே அரசியல்வாதியின் இலக்கு. ஒவ்வொரு கவுன்சிலருக்கும் நான்கு வீடுகள், மூன்று 'கீப்'கள், இரண்டு கார்கள். நீங்கள் வீடு கட்டினால், உங்கள் வீட்டுக் கழிவுநீர்க் கால்வாயை, பொது வாய்க்காலோடு இணைப்பதாக இருந்தாலும் சரி, குடிநீர்க்குழாய் இணைப்புப் பெறுவதாக இருந்தாலும் சரி, அதிகாரியைப் போய்ப் பார்த்தால், அவர் கவுன்சிலரைப் பார்க்கச் சொல்வார். கவுன்சிலரை நீங்கள் 'பார்க்க வேண்டிய விதத்தில் பார்க்காவிட்டால்', ஓர் ஆண்டு ஆனாலும் நீங்கள் கிரகப் பிரவேசம் நடாத்த முடியாது. கவுன்சிலர் இப்படி என்றால், எம்.எல்.ஏக்கள் எப்படி, மந்திரிகள் எப்படி என நீங்களே கணக்குப் போட்டுக் கொள்ளுங்கள்..."

**எனில், நான்கரை ஆண்டுகாலம் எம்.எல்.ஏ-வாக இருந்து நீங்கள் செய்தது என்ன?**

"எம்.எல்.ஏ—வாக இருந்துகொண்டு மேசையைத் தட்டலாம், கமிசன் வாங்கலாம், ஊரை அடித்து உலையில் போடலாம். வேறு எதுவும் செய்ய முடியாது. எனக்கு மேசையைத் தட்டும் பழக்கம் கிடையாது. ஆனால், எங்கள் கட்சியில் கம்ப்யூட்டர் புரோகிராம் போல, ஒரு நிமிடத்துக்கு ஒருமுறை தானாகவே அனைத்து உறுப்பினர்களும் மேசையைத் தட்டப் பழகியுள்ளனர்.

**ஆனால், நீங்கள் சட்டமன்றத்தில் பேசியதே இல்லையே?**

"ஆட்சியின் தொடக்கத்தில் உள்துறை மானிய விவாதத்தில், 'நில அபகரிப்பு மோசடியில் நம் அரசு பல தி.மு.க-க்காரர்கள் மீது கடும் நடவடிக்கை எடுத்து வருவது பாராட்டுக்குரியது. ஆனால், அரசு நிலங்களை அதிகாரிகளின் துணை இல்லாமல் அபகரிக்க முடியாது. ஆயினும் எந்த அதிகாரியின் மீதும் இதுவரை நடவடிக்கை இல்லை' எனப் பேசினேன். குறுக்கிட்ட முதலமைச்சர் எழுந்து, என் இருபது நிமிடப் பேச்சுக்கு முப்பது நிமிடங்கள் பதில் சொன்னார். அப்போது என் பக்கத்தில் இருந்த இன்றைய அமைச்சரான வேலுமணி, 'நீங்க இன்னும் பழைய காங்கிரஸ்காரராகவே இருக்கீங்க, அ.தி.மு.க-வில் தேறமாட்டீங்க!' எனச் சொன்னார். அதுதான் நான் சட்டமன்றத்தில் கடைசியாகப் பேசியது..."

**இதுபோன்ற விமர்சனங்களை நீங்கள் கட்சிக் கூட்டங்களில் பேசியிருக்கிறீர்களா... அல்லது ஏதோ ஒருவிதத்தில் தலைமைக்குத் தெரியப்படுத்தி இருக்கிறீர்களா?**

"இதற்கெல்லாம் அரசியலில் வாய்ப்பு இருப்பதாகக் கருதுகிறீர்களா? பொதுக்குழுவில் கைதட்டுவதற்கு எதற்கு நான் உறுப்பினராக இருக்க வேண்டும்?... கன்யாகுமரியில் இருந்து எதற்கு ஒருவன் இங்கு வரவேண்டும்?...

ஏதோ ஆடு – மாடுகளை மேய்ப்பதுபோல், கட்சியில் இருப்பவர்களை எல்லாம் மேய்த்துக் கொண்டிருக்கிறார்கள். கடைசியில் அந்தக் கட்சியின் தலைவர் விழும்போது கட்சியும் விழுந்துவிடும். பல நல்ல காரியங்களைச் செய்ய அதிகாரம் வேண்டும். அதற்காகத்தான் எம்.எல்ஏ ஆனேன். ஆனால், எல்லா முனைகளிலும் நான் தோற்றுப்போனேன்."

**எந்தவகையில் நீங்கள் தோற்றதாகச் சொல்கிறீர்கள்?**

"காசு இல்லாமல் எதுவும் செய்ய முடியாது எனப் பழக்கப்பட்ட ஒரு அரசாங்கத்தில் ஒரு எம்.எல்.ஏ பரிந்துரைப்பதற்கு எதுவுமே இல்லை..."

**கொஞ்சம் விரிவாகச் சொல்லுங்களேன்?**

"நான் சட்டமன்ற உறுப்பினராக இருக்கும் துறைமுகம் தொகுதியில் முஸ்லிம்கள்தான் அதிக வாக்காளர்கள். இந்தத் தொகுதி 40 ஆண்டுகளாக தி.மு.க – வின் கோட்டை. அதில் நான் நின்று வென்றேன்...

துறைமுகம் தொகுதி அங்கப்பநாயக்கன் தெருவில் உள்ள உருது முஸ்லிம் பள்ளிக்குச் சொந்தமான விளையாட்டுத்திடலை, பெரிய நபர் ஒருவர் ஆக்கிரமித்து வைத்திருக்கிறார். 'அந்த இடத்தை மீட்பேன்' என வாக்குறுதி கொடுத்தேன். நானும் எம்.எல்.ஏ ஆனதில் இருந்து போராடுகிறேன். ஒன்றும் செய்ய முடியவில்லை...இத்தகைய சட்டவிரோத நபர்களுக்கு மாவட்டச் செயலாளர்கள், எம்.பி – கள், அமைச்சர்கள், அதிகாரிகள் என எல்லோரும் துணை நிற்கிறார்கள்...ஒரு எம்.எல்.ஏ – வாக முஸ்லிம்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியவில்லை."

**இந்த நிலம் தவிர மற்ற விடயங்களில் உங்களால் செயல்பட முடிந்ததா?**

"'வெலிங்டன் ரீடிங் ரூம்' என்பது வெள்ளைக்காரர்கள் கட்டிய பாரம்பரியமான கட்டடம். துறைமுகம் தொகுதியின் மையப் பகுதியில் இருக்கும் அதை ஒரு பாத்திர வியாபாரி ஆக்கிரமித்து வருகிறார். அவர், அந்தக் கட்டடத்தை இடித்துவிட்டு, லாட்ஜ் கட்ட ஏற்பாடு செய்கிறார். என் கவனத்துக்கு வந்து அதைத் தடுக்கப் போராடியபோதுதான், அதில் ஒரு மந்திரி உட்பட பலர் சம்பந்தப்பட்டிருப்பது தெரிந்தது. ஒரு பிரிட்டிஸ் கட்டடத்தில் பாத்திரக்கடைக்கு என்ன வேலை? கலெக்டரிடம் சொன்னால், 'வரைபடத்திலேயே அந்தக் கட்டடம் இல்லை' என்கிறார்கள்.

பர்மா பஜாரில் 300 கடைகள் இருக்கின்றன. எல்லாமே 15 லட்ச ரூபாய்க்கும் மேல் விற்கப்பட்ட கடைகள். அதில் இரண்டு கடைகள் காலியாக இருந்தன...அதில் பர்மா பஜார் வியாபாரிகளின் பயன்பாட்டுக்காக கழிவறை கட்டத் திட்டமிட்டேன். அந்த இடத்தை நேரில் சென்று பார்த்தபோது, 'இது மாநகராட்சியின் இடம்' என எழுதப்பட்டிருந்தது. நிதி ஒதுக்கி அரசிடம் அனுமதி கேட்டேன். ஆறு மாதங்கள் கழித்து 'இது பொது இடம் அல்ல' என பதில் வந்தது.

முக்கியமாக, என்னுடைய துறைமுகம் தொகுதியில் இருந்துதான் தமிழ்நாடு முழுவதும் பான்பராக், கஞ்சா விநியோகிக்கப்படுகின்றன. எத்தனையோ முறை பலரிடம் முறையிட்டேன். சென்னை கலெக்கரிடம் போனேன். 'எங்கே நடக்கிறது?' எனக் கேட்டார். 'உங்கள் ஆபிசுக்கு கீழேயே நடக்கிறது' என்றேன். அப்படியே நிலைகுலைந்துபோனார். ஆனால், எந்த நடவடிக்கையும் இல்லை.

ஓர் ஆளும் கட்சி எம்.எல.ஏ – வாக மக்களுக்குச் செய்ய நினைத்துத் தோல்வி அடைந்த கதைகள் இன்னும் ஆயிரம் ஆயிரம் இருக்கின்றன...நான் மன உளைச்சலில் ராஜினாமா செய்வதைப் பற்றிப் பல தடவை யோசித்திருக்கிறேன். என் எம்.எல்.ஏ வாழ்க்கை தோல்வி அடைந்துவிட்டது. நான் துறைமுகம் தொகுதி மக்களிடம் மனப்பூர்வமாக மன்னிப்புக் கேட்டுக் கொள்கின்றேன். என்னை மன்னித்துவிடுங்கள்" அமைதியாக கண்கலங்கி அமர்ந்திருக்கிறார் பழ.கருப்பையா!

# வெளியேறும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள்! நல்லாட்சியில் நம்பிக்கை இழப்பு!!

நல்லாட்சி அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் ஏராளமான வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நாட்டை விட்டு வெளியேறிக் கொண்டிருப்பதாக ரொய்ட்டர் செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ரொய்ட்டர் செய்திச்சேவை வெளியிட்டுள்ள செய்தியில் தொடர்ந்தும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நல்லாட்சி அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் கடந்த வருடத்தில் மட்டும் சுமார் மூன்று பில்லியன் டொலர் பெறுமதியான வெளிநாட்டு முதலீடுகள் இலங்கையிலிருந்து வெளியே எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

அத்துடன் கடந்த வருடம் டிசம்பர் மாதம் வரை வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கையில் மேற்கொண்டிருந்த முதலீடுகளில் 22.4 பில்லியன் ரூபா பெறுமதியான முதலீடுகள் மீளப் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மூன்றாம் திகதியில் இருந்து பத்தாம் திகதி வரையான காலப் பகுதிக்குள் மட்டும் மத்திய வங்கி பிணை முறிகளில் முதலீடு செய்யப்பட்டிருந்த வெளிநாட்டு முதலீடுகளில் இருந்து 3.7 பில்லியன் டொலர்கள் அதாவது 21.33 பில்லியன் ரூபா பணம் திரும்பப் பெறப்பட்டுள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகளின் மூலம் இலங்கையின் வெளிநாட்டு நாணயக் கையிருப்பு வீழ்ச்சியடைந்துள்ளதுடன், இலங்கையின் வெளிநாட்டுக் கடன் தொகையும் அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக இலங்கை ரூபாவின் பெறுமதியில் தொடர்ச்சியான சரிவு ஏற்பட்டுள்ளதன் காரணமாக வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலைகளில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்தநிலை தொடர்ந்து நீடிக்கும் பட்சத்தில் இலங்கையின் உட்கட்டமைப்பு அபிவிருத்திகள் மற்றும் சுகாதாரம், கல்வி போன்ற துறைகளுக்கான நிதியொதுக்கீடுகளில் பாரிய வீழ்ச்சி ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

பார்வைகள்:

அ.வரதராஜப்பெருமாள் (வடக்கு கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர்)

# "இந்தியா உதட்டளவிலேயே இலங்கைத் தமிழர்களுக்குச் சேவை செய்கிறது!"

*"முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி ஒரு சமஸ்டி அரசியல் சாசனத்தை ஏற்கும்படி இலங்கையைக் கேட்டதில்லை. அதுமாத்திரமின்றி, இலங்கை அரசியல் சாசனத்தில் செய்யப்பட்ட 13-வது சட்டத் திருத்தத்தை வரைவதிலோ அல்லது அதன் அமுலாக்கத்திலோ பங்குபற்றியதும் இல்லை"* இவ்வாறு கூறியிருக்கிறார் முன்னாள் வடக்கு கிழக்கு மாகாண முதலமைச்சரும், ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத்தின் ஒரு பிரிவின் முக்கியஸ்தருமான அண்ணாமலை வரதராஜப்பெருமாள்.

'த நியூ இன்டியன் எக்ஸ்பிரஸ்'பத்திரிகையின் கொழும்பு நிருபர் பி.கே.பாலச்சந்திரனுக்கு அண்மையில் வழங்கிய பேட்டியொன்றிலேயே இவ்வாறு அவர் கூறியிருக்கிறார். அவரது பேட்டியின் சாராம்சம் வருமாறு:

*"1986-ல் நாம் ராஜீவைச் சந்தித்தபோது, இந்தியா, ஒரு சமஸ்டி அரசியல் அமைப்பை ஏற்கும்படி இலங்கையைக் கேட்டுக்கொள்ளாது என அவர் வெளிப்படையாகவே கூறினார். ஆனால் அதனுடன் சேர்த்து அவர் கூறும்போது, இலங்கைத் தமிழர்கள் தமக்கு விருப்பமான அரசியல் அமைப்பு யோசனைகளை தமது அரசாங்கத்திடம் தாமே சுதந்திரமாக முன்வைக்கலாம் எனவும் கூறினார்".*
"இந்தியப் பிரதமர் ஏன் சமஸ்டிக்கு எட்டவாக நின்றார்?" என்ற கேள்விக்குப் பதிலளித்த பெருமாள்,

*"அந்த நேரத்தில் பஞ்சாப்பிற்கு சுயாட்சி கோரிய ஒரு பலம்வாய்ந்த தீவிரவாத அமைப்புடன் ராஜீவ் போராடிக் கொண்டிருந்தது ஒரு காரணமாக இருக்கலாம்"* எனக் குறிப்பிட்டார். மேலும் அவர் கூறுகையில்:

*"இந்தியா, 1987-ல் இந்திய - இலங்கை உடன்படிக்கையைச் செய்தபோது தனக்கு இருந்த ஈடுபாட்டை கௌரவிக்கத் தவறிவிட்டது. 13A திருத்தச் சட்டத்தை வரைவதிலோ, அதன் நடைமுறையை மேற்பார்வை செய்வதிலோ அல்லது கண்காணிப்பதிலோ இந்தியா எந்தவிதப் பங்கையும் வகிக்கவில்லை. அதனுடைய செயலற்ற தன்மை இலங்கை அரசாங்கங்கள் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்காமல் 13A திருத்தச் சட்டத்தை மீறுவதற்கு வழிவகுத்தது. 2006-ல் வடக்கும் கிழக்கும் பிரிக்கப்பட்ட பொழுது, எந்தத் தரப்பிலிருந்தம் அதற்கு எதிர்ப்புகள் வரவில்லை".*

இந்தியாவின் இந்த நிலைப்பாடு பற்றி விளக்கும்படி பெருமாளிடம் கேட்டபொழுது,

*"அதைப் பொறுத்தவரை இந்திய - இலங்கை உடன்படிக்கைக்கான எதிர்ப்புகளுக்கு ஒரு காரணம், திமுக தலைவர் கருணாநிதி அதை எதிர்த்தது ஆகும். மற்றது 1989 இல் அவரைத் தோற்கடிப்பதற்கு வி.பி.சிங் இதைப் பயன்படுத்தியதும் ஆகும்"* எனக் கூறினார்.
மேலும் அவர் கூறுகையில்:

*"1991-ல் புலிகள் ராஜீவைக் கொலை செய்த பின்னர், இலங்கை சம்பந்தமாக "சம்பந்தப்படுவதில்லை" (Hands Off) என்ற கொள்கையை இந்தியா கடைப்பிடித்து வருவதுடன், இலங்கைத் தமிழர் பிரச்சினையில் உதட்டளவிலான சேவையையே புதுடில்லி செய்து வருகிறது.*

*புதுடில்லி இப்பொழுது இந்திய - இலங்கை உறவுகளை மேம்படுத்துவதிலேயே கவனம் செலுத்தி வருகிறது. மேற்கும் தனது நிகழ்ச்சிநிரலை வைத்திருக்கிறது. ஒருகால் அந்த நிகழ்ச்சிநிரல் நிறைவேறியதும் அது மனித உரிமைப் பிரச்சினைகளை நிறுத்திவிடும். இத்தகைய நிலைமைகளில் தமிழர்களும் சிங்களவர்களும் நேரடியாகத் தமக்கிடையேயே பேசி பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண்பதே சிறந்தது.*

*தற்பொழுது வட மாகாணசபையைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு, அரசியல் அமைப்பின் 13-ஆவது சட்டத் திருத்தத்தின் கீழ் உள்ள உரிமைகளைப் பெற்றெடுப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.*

*தமிழர்களின் நீண்டகாலமானதும், சட்டபூர்வமானதுமான சமஸ்டிக் கோரிக்கையை அவர்கள் எதிர்பார்ப்பதுபோல எடுத்த எடுப்பிலேயே அடைந்துவிட முடியாது. ஒரு பெரும் பாய்ச்சல் மூலம் இந்த இலட்சியத்தை அடைய முடியாது என்பதை வரலாறு எடுத்துக் காட்டுகிறது. ஆனால் தொடர்ச்சியான சிறுசிறு நடவடிக்கைகள் மூலம் இந்த இலட்சியத்தை அடைய முடியும்.*

*வட மாகாணசபை, அரசியல் விடயங்கள் சம்பந்தமாக தீர்மானங்கள் நிறைவேற்றுவதை விட்டுவிட்டு, 13A திருத்தச் சட்த்தின் கீழுள்ள உரிமைகளைப் பெறுவதை நோக்கியும், அதிலுள்ள குறைபாடுகளை நீக்குவதை நோக்கியும் வேலை செய்ய வேண்டும்".*

இவ்வாறு கூறியிருக்கிறார் வடக்கு கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் அ.வரதராஜப்பெருமாள்.

---

ஜனநாயகம் என்னும் வார்த்தை முதலாளித்துவ ஜனநாயகத்திற்கு மெருகிட்டு மினுக்கச் செய்வதும் இல்லாமல் சோசலிச விமர்சனத்தைப் புரிந்து கொள்ளவும் தவறிவிடுகிறது. ஜனநாயகக் குடியரசு முதலாளித்துவத்தில் பாட்டாளி வர்க்கத்துக்கு மிகச் சிறந்த அரசு அமைப்பாகும் என நம்மை ஆதரிக்க வைக்கிறது. ஆனால் மிகவும் ஜனநாயகமான முதலாளித்துவக் குடியரசிலும் மக்கள் ஒடுக்கப்படும் தத்துவமே இருக்கிறது.

-எங்கெல்ஸ்

## வளர்ந்த நாடுகளிலும் மொழிப்பாகுபாடு!

கனடாவின் கியூபெக் மாகாணம் பிரெஞ்சு வம்சாவழியினரை பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு மாகாணமாகும். அந்த மாகாண மக்கள் கனடாவில் இருந்து பிரிந்து தனிநடாவதற்காக நீண்டகாலமாக முயற்சித்து வருகின்றனர். அதற்கு அருகிலுள்ள ஒன்ராறியோ மாகாணம் ஆங்கிலம் பேசுபவர்களையும், குடியேற்றவாசிகளையும் அதிகமாகக் கொண்ட மாகாணமாகும். ஆனால் பிரெஞ்சு மொழி பேசுபவர்களும் அங்கு கணிசமாக வாழ்கின்றனர்.

1912இல் ஒன்ராறியோ மாகாணத்தில் கொண்டுவரப்பட்ட சட்டத்தின்படி, அம்மாகாணத்தின் ஆரம்ப மற்றும் நடுத்தரப் பாடசாலைகளில் பிரேஞ்சு மொழிமூலம் கல்வி கற்பிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டது. பிரெஞ்சு மொழி பேசும் பிள்ளைகள் தமது தாய்மொழியில் கல்வி கற்கும் உரிமைக்கான தடை 1984 வரை நீடித்தது. பின்னர் தடை நீக்கப்பட்டது.

தற்போது கனடாவின் மத்திய அரசாங்கத்தை நிர்வகிக்கும் பிரதமர் ஜஸ்ரின் ரூடோவின் லிபரல் கட்சியைச் சேர்ந்த கதலீன் வைன் அம்மையார் ஒன்ராறியோவின் பிரதமராக இருக்கின்றார். அவர் அண்மையில் ஒன்ராறியோ சட்டசபையில் பேசும்போது, பிரெஞ்சு மொழிப் பிள்ளைகளுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்காக மன்னிப்புக் கோரியுள்ளார்.

## முன்னாள் பாப்பரசரின் அந்தரங்கம்!

காலஞ்சென்ற முன்னாள் பாப்பரசர் ஜோன் போல் 2 (John Paul II) அவர்கள் நீண்டகாலமாக திருமணமான ஒரு பெண்ணுடன் இரகசிய உறவுகளை வைத்திருந்ததாகத் தெரிய வந்துள்ளது!

பிபிசி தயாரித்த ஒரு




ஆவணப்படத்தில் பாப்பரசருக்கும் அந்தப் பெண்ணுக்குமிடையில் பரிமாறப்பட்ட கடிதங்களை வைத்து இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது. இருவருக்குமிடையிலான உறவு, சாதாரண நண்பர்களுக்கு இடையிலானதைவிட மேலானதாகவும், காதலர்களுக்கிடையிலானதைவிடக் குறைவானதாகவும் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

## மோடியின் குஜராத்தில் இருந்து…

உலகின் இயற்கை வைரங்களில் (Diamonds) பத்தில் ஒன்பது பங்கு இந்தியாவின் குஜராத் (சூரத்) மாநிலத்திலிருந்தே உலகம் முழுவதும் விற்பனைக்குச் செல்கின்றன. வைரத்தை வெட்டுவது, பட்டை தீட்டுவது எல்லாமே குஜராத்தில் பாரம்பரியமாக குடிசைக் கைத்தொழிலாகவே நடைபெற்று வருகின்றது. இந்தத் தொழிலில் சுமார் 5 இலட்சம் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

## 10,000 அகதிச் சிறுவர்களைக் காணவில்லை!

ஐரோப்பிய பொலிஸ் முகவரகமான யூரோபோல் (Europol) வெளியிட்டுள்ள தகவலின்படி, கடந்த இரண்டு ஆண்டுகளில் ஐரோப்பாவுக்குள் சிறுவர்களாக நுழைந்த பதின்ம வயதுச் சிறுவர்களில் 10,000 பேர்வரை காணாமல் போயிருக்கிறார்கள்! இவர்களில் பெரும்பாலோர் சிரியாவிலிருந்தும், ஆப்கானிஸ்தானிலிருந்தும் வந்தவர்களாவர்.

சில திட்டமிட்ட குழுக்களினால் இச்சிறுவர்கள் பாலியல் தொழிலுக்காகவும், போதைவஸ்து வியாபாரத்துக்காகவும் கடத்திச் செல்லப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

## பார்வையை இழந்தால், வாழ்க்கையை இழப்பீர்!

உலகம் முழுவதும் 39 மில்லியன் மக்கள் கண் பார்வையற்றவர்களாக இருப்பதாகவும், அதில் 150,000 பேர் இலங்கையில் இருப்பதாகவும் இலங்கை சௌக்கிய சேவைகள் பணிப்பாளர் நாயகம் டொக்டர் மகிபால தெரிவித்திருக்கிறார். பெரும்பாலோர் கண்புரை காரணமாகவே பார்வையை இழந்திருப்பதாகவும், ஒரு சாதாரண சத்திரசிகிச்சை மூலம் குணமாக்கக்கூடிய இந்நோயை, அசட்டையாக இருப்பதன் காரணமாக பலர் இந்நோய்ப் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மக்களின் கண் பார்வையை மேம்படுத்துவதற்காக சுகாதார அமைச்சு வருடந்தோறும் 2 மில்லியன் ரூபாக்களுக்கு மேல் ஒதுக்குவதாகவும், நாடு முழுவதும் தராதரம்மிக்க 58 கண் சத்திரசிகிச்சை நிபுணர்கள் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## தேவைப்படும் மூச்சு

நாம் படுத்திருக்கும் போது 1 நிமிடத்திற்கு 9 லிட்டர் மூச்சுக் காற்றும், உட்கார்ந்திருக்கும் போது 18 லிட்டர் மூச்சுக்காற்றும், நடக்கும் போது 1 நிமிடத்திற்கு 27 லிட்டர் மூச்சுக்காற்றும் தேவைப்படுகிறது.

## மாமேதை லெனின் மூளை பற்றிய ஆய்வின் முடிவு!

ரஸ்யப் புரட்சியின் தந்தை என வர்ணிக்கப்படும் லெனின் அவர்கள் 1924இல் காலமானார். அவரது பூதவுடல் இரசாயனப் பொருட்கள் மூலம் இன்றுவரை கிரெம்ளின் மாளிகை அருகே பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

உலகின் முதலாவது தொழிலாளர் அரசை நிறுவிய லெனினின் மூளை அசாத்தியத் திறமை வாய்ந்ததாக இருக்குமோ எனக் கருதிய விஞ்ஞானிகள், அவர் இறந்த பின்னர் அவரது மூளையைத் தனியாகப் பிரித்தெடுத்து பல வருடங்களாக ஆய்வு மேற்கொண்டனர். ஆனால் முடிவில் அவரது மூளையும் சாதாரண மனிதர்களின் மூளை போன்றதே என்ற முடிவுக்குத்தான் வந்தனர்.

இந்த ஆய்வின் முடிவு ஒருவருடைய குணாம்சங்கள், திறமைகள் என்பன பிறப்பால் மட்டும்தான் வருவன என்ற அஞ்ஞானிகளின் கருத்து தவறு என நிரூபித்து, அவை புறச்சூழல்களால் உருவாக்கப்படுபவை என்ற மார்க்சிச அடிப்படையிலான விஞ்ஞான உண்மையை நிரூபித்துள்ளன.

## அடுத்த ஐ.நா. செயலாளர் நாயகம் ஒரு பெண்?

1960இல் உலகின் பெண் பிரதமரான திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்கவை இலங்கை பெருமையுடன் உலகிற்கு அளித்தது. அதன்பின்னர் தொடர்ச்சியாக பல பெண்கள் உலகின் பல நாடுகளில் பிரதமர்களாகவும், ஜனாதிபதிகளாகவும் முடி சூடிக் கொண்டனர். வேறு பல முக்கிய பதவிகளிலும் அமர்ந்தனர்.

அந்த வரிசையில் தற்போது ஒரு புதிய கோரிக்கை எழுந்துள்ளது. அதாவது, ஐ.நாவின் அடுத்த செயலாளர் நாயகமாக ஒரு பெண் நியமிக்கப்பட வேண்டும் என்பதே அந்தக் கோரிக்கை. கொலம்பிய நாட்டின் தலைமையில் சுமார் 3 டசின் நாடுகள் இந்தக் கோரிக்கையைக் கூட்டாக விடுத்துள்ளன.

## இலங்கையில் 22,254 தமிழ் பௌத்தர்கள்!

இலங்கையில் 2012இல் மேற்கொள்ளப்பட்ட ஒரு குடிசன மதிப்பீட்டின்படி, நாடு முழுவதும் 22,254 தமிழ் பௌத்தர்களும், 11 தமிழ் பௌத்த குருமாரும் இருப்பதாகத் தெரிய வந்துள்ளது. இவர்களில் 470 பேர் வடபகுதியில் இருக்கின்றனர். 2013இல் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட 'ஸ்ரீ நந்தராம' என்ற தமிழ் பௌத்த தம்ம பாடசாலையில் 80 தமிழ் பிள்ளைகள் கல்வி கற்கின்றனர் எனவும் தெரிய வந்துள்ளது. சமீபத்தில் நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் மாத்தறை மாவட்ட உறுப்பினர் புத்திய பத்திரான கேட்ட கேள்வியொன்றுக்குப் பதில் அளிக்கையிலேயே, அமைச்சர் கயந்த கருணதிலக இத்தகவலை வெளியிட்டார்.

## உலகின் மிகப்பெரிய இரத்தினக்கல்!

இரத்தினக்கல் அகழ்விற்குப் புகழ்பெற்ற இலங்கையின் இரத்தினபுரிப் பகுதியில் அண்மையில் 1410 கரட் நிறையுள்ள உலகின் மிகப்பெரிய, சபையர் (Sapphire) எனப்படும் நீலநிறக்கல் ஒன்று கிடைத்துள்ளது. இந்தக் கல்லின் மதிப்பு 665 கோடி ரூபா என மதிப்பிடப்பட்டிருந்தாலும், ஏலவிற்பனையின் போது, இந்தக் கல் 1165 கோடி ரூபா வரை விற்பனையாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆதிகாலத்தில் ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியேறிய ஆதாம் இந்த மலைச்சரிவுகளில் வந்து தங்கியிருந்ததாக ஒரு ஐதீகம் நிலவுவதால். இந்தக் கல்லுக்கு 'ஆதாமின் நட்சத்திரம்' எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

## பூகம்பப் பூமி!

தென் கிழக்காசிய நாடுகளிலும், சில தென் அமெரிக்க நாடுகளிலும்தான் கூடுதலான பூகம்பங்கள் ஏற்பட்டு வந்தாலும், தென்னாசிய நாடுகளான பாகிஸ்தான், நேபாளம், ஆப்கானிஸ்தான் என்பனவற்றிலும், வட இந்தியாவின் சில பகுதிகளிலும் கூட ஏற்பட்டு வந்திருக்கிறது. சமீபத்தில் வெளியான ஒரு ஆய்வில் இந்தியாவின் மொத்த நிலப்பரப்பில் 58.6 வீதம் பூகம்ப அபாயத்தில் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

## பூமித்தாயின் மூத்த புதல்வர்கள்!

பூமி தோன்றிய ஆரம்ப காலங்களில் டைனோசர்கள் உட்பட மிகப்பெரிய விலங்குகள், பறவைகள், ஊர்வன வாழ்ந்ததாகவும், பின்னர் அவை இயற்கையின் அனர்த்தங்களால் அழிந்து போனதாகவும் கண்டறியப்பட்டு வருகின்றது. குறிப்பாக பல இலட்சம் வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த ராட்சத டைனோசர்களின் எலும்புக்கூடுகள் உலகின் பல நாடுகளில் கண்டெடுக்கப்பட்டு வருகின்றன. அண்மையில் அதுமாதிரியான ஒரு எலும்புக்கூட்டை வட கிழக்கு சீனாவில் விவசாயிகள் நிலத்தை உழும்போது கண்டெடுத்துள்ளனர். அந்த எலும்புக் கூட்டுக்குரிய டைனோசர் வாழ்ந்த காலம் 120 மில்லியன் வருடங்களுக்கு முந்தியதெனக் கண்டறியப்பட்டுள்ளது.

## இதிலும் அமெரிக்கா முன்னணியில்!

சுமார் 33 கோடி மக்கள் தொகை கொண்ட அமெரிக்காவில் 2.2 மில்லியன் (22 இலட்சம்) மக்கள் பல்வேறு குற்றச்சாட்டுகளுக்காக சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இந்தத் தொகை உலகின் ஆகக்கூடிய சனத்தொகையான சீனாவின் 135 கோடி மக்கள் தொகையுடன் ஒப்பிடுகையில் 34 சதவிகிதம் அதிகமானதாகும்.

# 1956 முதல் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் நடைபெற்று வந்த வலதுசாரிச் சதிகள்!

**சி**றீலங்கா சுதந்திரக் கட்சி (சிறீ.ல.சு.க.) வலதுசாரிகளின் பிடியில் சிக்கியுள்ளதால் அதன் எதிர்காலம் குறித்து தேசப்பற்றுள்ள அனைவரும் கவலைக்குள்ளாகி உள்ளனர். ஏனெனில், 1948 பெப்ருவரி 4ல் இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னரான 67 ஆண்டுகளில் சிறீ.ல.சு.க தலைமையிலான அரசுகள் ஆட்சியில் இருந்த ஏறத்தாழ 35 வருடங்களிலேயே தேசத்துக்காகவும், மக்கள் நலனுக்காகவும் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதன் காரணமாகவே நவீன வரலாற்றில் இலங்கை உலக நாடுகள் மத்தியில் தலைநிமிர்ந்து நிற்க முடிந்தது.

சிறீ.ல.சு.வவை 1951ல் ஆரம்பித்தவர்களில் இரண்டு முக்கியமானவர்கள் எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கவும் (சந்திரிகவின் தந்தை), டி.ஏ.ராஜபக்சவும் (மகிந்த ராஜபக்சவின் தந்தை) ஆவர். பண்டாரநாயக்கவை பிற்போக்கு சக்திகள் 1959ல் படுகொலை செய்த பின்னர், அவரது மனைவி சிறீமாவோ பண்டாரநாயக்க கட்சியையும், நாட்டையும் தனது கணவரின் அடிச்சுவட்டில் சிறப்பாக வழிநடத்தினார்.

அவர்களது புதல்வி சந்திரிக குமாரதுங்க 1994ல் நாட்டின் ஜனாதிபதியாகத் தெரிவானதும், பதவி வழி காரணமாக சுதந்திரக் கட்சியின் தலைவராக 11 ஆண்டுகள் பதவி வகித்தார். அந்தக் காலகட்டத்தில் அவர் கட்சியை அமைப்பு ரீதியில் பலப்படுத்துவதில் பெரிதும் அக்கறை காட்டாததுடன், தமது பெற்றோர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி முற்போக்கு நடவடிக்கைகள் எதையும் பெரிதாக எடுக்கவுமில்லை. அதற்கு இரண்டு விடயங்கள் காரணமாக இருந்தன எனலாம்.

ஒன்று, ஐக்கிய தேசியக் கட்சியினால் (ஐ.தே.க.) ஆரம்பிக்கப்பட்டு பின்னர் சந்திரிகவிடம் கையளிக்கப்பட்ட புலிகளுடனான யுத்தம். மற்றைய காரணம், பண்டாரநாயக்க தம்பதிகளின் மற்றைய இரு பிள்ளைகளைகளான சுனேத்ர, அனுர போலவே சந்திரிகவும் தமது பெற்றோர்களைப் போல தீவிர ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்களாக வளர்க்கப்பட்டிருக்கவில்லை.

இந்த நிலைமைகளே, சந்திரிக இன்று சர்வதேச பிற்போக்கு சக்திகளின் வலையில் விழவும், ஐ.தே.கவுடன் சமரச அரசியல் செய்யவும் வழிவகுத்துள்ளன என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால், அவரது பெற்றோர்களான எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கவும், திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்கவும் கூட, தமது காலகட்டத்தில் மிகவும் மோசமான வலதுசாரி சதிகளை நாட்டில் மட்டுமின்றி, தமது கட்சியிலும் எதிர்நோக்கியவர்கள்தான். ஆனால் அவர்கள் தமது உறுதியான நடவடிக்கைகள் காரணமாகவும், இடதுசாரிச் சக்திகளின் ஆதரவு காரணமாகவும், அவற்றிலிருந்து ஓரளவு வெற்றிகரமாக மீண்டு வந்தனர். அவற்றில் சிலவற்றை எமது வாசகர்கள் தெரிந்து கொள்வதற்காக தருவது அவசியம்.




பண்டாரநாயக்க 1956இல் ஐ.தே.கவை மிகவும் மோசமான முறையில் தோற்கடித்து (அந்தத் தேர்தலில் அக்கட்சிக்கு ஆக 8 ஆசனங்களே கிடைத்தன), ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றினார். அவர் ஆட்சிக்கு வந்ததும் மேற்கொண்ட மிகவும் தீவிரமான ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைகள் காரணமாக, அந்நிய வல்லாதிக்க சக்திகள் – குறிப்பாக எமது நாட்டில் 200 வருடங்களுக்கு மேல் காலனி ஆட்சி நடாத்திய பிரித்தானிய ஏகாதிபத்தியம், பண்டாரநாயக்க அரசுக்கு எதிராகப் பல குழிபறிப்பு வேலைகளைச் செய்தது. அதற்கு ஏகாதிபத்திய விசுவாசிகளான ஐ.தே.க. மட்டுமின்றி, அதே விசுவாசம் கொண்ட தமிழ் கட்சிகளான தமிழ் காங்கிரஸ் – தமிழரசு கட்சிகளும் உதவின.

உதாரணமாக, திரிகோணமலையிலும், கட்டுநாயக்கவிலும் இருந்த பிரித்தானியரின் கடற்படை, விமானப்படைத் தளங்களை நாட்டிலிருந்து பண்டாரநாயக்க வெளியேற்றிய போது, அவர்களை வெளியேற வேண்டாம் என தமிழரசுக் கட்சித் தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம், பிரித்தானிய அரசி எலிசபெத்துக்கு தந்தி அனுப்பினார். அதாவது, இந்திய சுதந்திரப் போராட்டத்தின் தலைவர் காந்தி, “வெள்ளையனே, வெளியேறு!” எனக் கோசமெழுப்ப, தனக்கு ‘ஈழத்துக் காந்தி’ எனப் பெயர் சூட்டிக்கொண்ட செல்வநாயகம், “வெள்ளையனே, வெளியேறாதே!” எனத் தந்தி அனுப்பினார்!

இருந்தபோதிலும், பண்டாரநாயக்க ஆட்சிக்கு வந்ததும், செல்வநாயகத்தை அழைத்துப் பேச்சுவார்த்தை நடாத்தி, ‘பண்டா – செல்வா உடன்படிக்கை’ என்ற பெயரில், தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு சுயாட்சி வழங்கக்கூடிய ஒப்பந்தம் ஒன்றைச் செய்தார்.

## நமது அரசியல் நிருபர்

அந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தவிடாமல் கிழித்தெறிய வைக்கும் தீவிர நடவடிக்கைகளில், ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான ஐ.தே.க. இறங்கியது. ஜே.ஆர்., ஐ.தே.கவினரையும், பௌத்த பிக்குகளையும் அழைத்துக் கொண்டு ஒப்பந்தத்துக்கு எதிராக ‘கண்டி யாத்திரை’ சென்றார். (ஆனால் இலக்கை அடைவதற்கு முன்னர், பண்டாரநாயக்கவின் ஒன்றுவிட்ட சகோதரரும், அப்போதைய கம்பஹா தொகுதி சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்.டி. பண்டாரநாயக்கவினால் அந்த ஊர்வலம் இம்புல்கொட என்ற சந்தியில் வைத்து அடித்துக் கலைக்கட்டது) பண்டாரநாயக்கவின் இல்லத்தையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் சுற்றி வளைத்தனர். இறுதியாக வீட்டுக்கு வெளியே வந்த பண்டாரநாயக்க, சிங்களப்

பேரினவாதிகளின் நிர்ப்பந்தத்தால் ஒப்பந்த நகலைக் கிழித்தெறிய வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளானார்.

சிங்களப் பேரினவாதிகளின் கட்சியான ஐ.தே.க. இப்படி நடந்து கொண்டதில் வியப்பதற்கு ஏதுமில்லை. ஆனால், சிறீ.ல.சு.கவிற்குள் இருந்த வலதுசாரிப் பிரிவினரும் இந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த விடாமல் தடுப்பதில் மறைமுகமான சூழ்ச்சிகளில் இறங்கினர் என்பதுதான் குறிப்பிடத்தக்கது. முன்னர் ஒருமுறை வாகனங்களில் உள்ள ஆங்கில எழுத்துக் கொண்ட இலக்கத் தகடுகளுக்குப் பதிலாக, சிங்கள 'சிறீ' எழுத்துப் பொறித்த இலக்கத் தகடுகளை அமுலுக்குக் கொண்டு வந்த பொழுது, அதற்கு தமிழரசுக் கட்சி எதிர்ப்புத் தெரிவித்ததால், அது திரும்பப் பெறப்பட்டது. ஆனால், 'பண்டா — செல்வா ஒப்பந்தம்' எழுதப்பட்டதை விரும்பாத சிறீ.ல.சு.கவினுள் இருந்த வலதுசாரிகள் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இனக் குரோதத்தைத் தூண்டுவதற்காக மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு சிங்கள சிறீ எழுத்துப் பொறித்த பஸ்களைத் திட்டமிட்டு அனுப்பி வைத்தனர்.

அவர்கள் எதிர்பார்த்த மாதிரியே தமிழரசுக் கட்சியினர் சிங்களச் சிறீ எதிர்ப்புப் போராட்டம் என்ற வலைக்குள் விழுந்தனர். தமிழரசுக் கட்சியின் 'தளபதி' என்று வர்ணிக்கப்பட்ட அ.அமிர்தலிங்கம் தார்ச்சட்டியுடன் வீதியில் இறங்கி பஸ்களில் இருந்த சிங்களச் சிறீ எழுத்துக்களை அழித்து இனக்குரோத அரசியலுக்கு எண்ணெய் ஊற்றிவிட்டார். ஆரம்பத்தில் என்ன எதிர்ப்பு வந்தாலும் தான் செல்வநாயகத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தைக் கைவிடுவது இல்லை என உறுதியுடன் இருந்த பண்டாரநாயக்கவின் கரங்களைப் பலப்படுத்த வேண்டிய தமிழரசுக் கட்சி, அற்ப விடயத்துக்காக வீதியில் தார்ச்சட்டியுடன் இறங்கி சிங்களப் பேரினவாத ஐ.தே.கவின் திட்டத்துக்கு உதவி பண்டா — செல்வா ஒப்பந்தத்தைக் கிழித்தெறியும் சூழ்நிலைக்கு உரமிட்டது.

இந்தச் சம்பவம்தான், சிறீ.ல.சு.கவினுள் ஏற்பட்ட வலதுசாரிகளின் முதலாவது சதி நடவடிக்கையாகும். அதில் அவர்கள் வெற்றி பெற்றாலும் பண்டாரநாயக்கவின் அரசை அவர்களால் வீழ்த்த முடியவில்லை. ஆனால் பின்னர், வெளிநாட்டு — உள்நாட்டு பிற்போக்கு சக்திகள் திட்டமிட்ட முறையில் பண்டாரநாயக்கவைக் கொலை செய்து தமது நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்டனர்.

பண்டாரநாயக்கவின் கொலையின் பின்னர், சிறீ.ல.சு.க. மௌனித்து விடும் அல்லது அடுத்த தலைமை அவரது கொள்கைகளிலிருந்து தடம் புரண்டு விடும் எனப் பிற்போக்கு சக்திகள் எதிர்பார்த்தனர். ஆனால், தனது கணவரின் மறைவிற்குப் பின்னர் கட்சித் தலைமையைப் பொறுப்பேற்ற பண்டாரநாயக்கவின் மனைவி சிறீமாவோ, துணிகரமாக கட்சியை வழிநடாத்தி, நாட்டின் பிரதமராகி, உலகின் முதல் பெண் பிரதமர் என்ற பெருமையையும் பெற்றார். அதுமாத்திரமின்றி, பிற்போக்கு சக்திகள் எதிர்பார்த்ததிற்கு மாறாக, இடதுசாரிகளுடன் கூட்டுச் சேர்ந்து தனது கணவரின் ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொள்கைகளை மேலும் தீவிரமாக முன்னெடுத்துச் சென்றார்.

இதைப் பொறுத்துக் கொள்ளாத பிற்போக்குச் சக்திகள் இராணுவத்திலிருந்த ஐ.தே.கவுக்குச் சார்பான வலதுசாரி சக்திகள் மூலமாக 1962இல் சிறீமாவோ அரசுக்கு எதிராக இராணுவச்சதி ஒன்றுக்கு ஏற்பாடு செய்தன. ஆனால் இராணுவத்திலிருந்த சில தேசபக்த அதிகாரிகள் மூலம் உரிய நேரத்தில் அந்தத் தகவல் அரச தலைமைக்கு எட்டியதால் சதித்திட்டம் முளையிலேயே கிள்ளி எறியப்பட்டது.

ஆனாலும், பிற்போக்கு சக்திகள் தமது முயற்சியைக் கைவிடவில்லை. 1964இல் சிறீமாவோ அரசு, இலங்கை முற்போக்கு சக்திகளின் நீண்டகாலக் கோரிக்கையான வலதுசாரி ஏரிக்கரை (லேக்ஹவுஸ்) பத்திரிகை நிறுவனத்தைத் தேசவுடமையாக்கும் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தது. அதைச் சாதகமாகப் பயன்படுத்திய பிற்போக்கு சக்திகள், சிறீ.ல.சு.கவிற்குள் இருந்த சி.பி.டி.சில்வா தலைமையிலான வலதுசாரி நாடாளுமன்ற உறுப்பினர்களை அந்த மசோதாவுக்கு எதிராக வாக்களிக்க வைத்து, சிறீமாவோ அரசைத் தோற்கடித்தன. அதன் காரணமாக நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத்தேர்தலுக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.

1965 பொதுத்தேர்தலில் சிறீ.ல.சு.கவோ, ஐ.தே.கவோ தனித்து அரசு அமைக்க அறுதிப் பெரும்பான்மை பெற்றிராதபோதும், தமிழரசு, தமிழ் காங்கிரஸ் போன்ற தமிழ் இனவாத கட்சிகளின் ஆதரவுடனும், கே.எம்.பி ராஜரத்ன, ஆர்.ஜீ.சேனநாயக்க போன்றவர்களின் சிங்கள இனவாத கட்சிகளின் உதவியுடனும் ஐ.தே.க. ஏழுகட்சிக் கூட்டாட்சி ஒன்றை அமைத்தது. சிங்கள — தமிழ் வலதுசாரி, இனவாத சக்திகளின் இந்தக் கபட நாடகத்தால் கோபமடைந்த மக்கள், 1970 பொதுத்தேர்தலில் சிறீமாவோவின் சிறீ.ல.சு.க., இடதுசாரிக் கட்சிகளான லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி என்பனவற்றைக் கொண்டமைந்த 'மக்கள் முன்னணி'யை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் வெற்றிபெற வைத்தன.

மக்களின் மிகுந்த ஆதரவுடன் பதவிக்கு வந்த அந்த அரசை ஒரு வருடத்திலேயே கவிழ்ப்பதற்கான முயற்சியை சர்வதேச ஏகாதிபத்திய சக்திகளும், உள்நாட்டுப் பிற்போக்கு சக்திகளும் சேர்ந்து ஜே.வி.பி. இயக்கத்தின் ஆயுதக் கிளர்ச்சி வடிவத்தில் 1971 ஏப்ரலில் அரங்கேற்ற முயற்சித்தன. ஆனால் சிறீமாவோவின் உறுதியான தலைமைத்துவத்தினாலும், இடதுசாரிக் கட்சிகள் வழங்கிய ஆதரவினாலும், அந்த எதிர்ப்புரட்சி கிளர்ச்சி முறியடிக்கப்பட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தில் பிற்போக்கு சக்திகள் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு இரட்டைச் சூழ்ச்சி அணுகுமுறையைக் கைக்கொண்டன. ஒருபுறத்தில் ஜே.வி.பியைப் பயன்படுத்தி ஆயுதக்கிளர்ச்சி மூலம் சிறீமாவோ அரசைக் கவிழ்க்க முயன்றன. மறுபுறத்தில் 'சிறீமாவோ போன்ற பெண் ஒருவரால் இப்படியான இக்கட்டான சூழ்நிலையைச் சமாளிப்பது கஸ்டம்' என்று கூறிக்கொண்டு, சிறீ.ல.சு.கவில் இருந்த வலதுசாரிகளின் தலைமைப் பேர்வழியான பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க என்ற 'இரும்பு மனிதனை' நாட்டின் பிரதமராக்க வேண்டும் என்ற கருத்தைப் பிரச்சாரம் செய்து, வலதுசாரிகளின் கையில் ஆட்சியை எடுக்க முயன்றனர். ஆனால் சிறீமாவோவின் உறுதியான தலைமைத்துவத்தாலும், இடதுசாரிக் கட்சிகளின் ஆதரவாலும் அவர்களது அந்தச் சதித்திட்டமும் முறியடிக்கப்பட்டது.

இந்த நெருக்கடிகளின் மத்தியிலும் மக்கள் முன்னணி அரசாங்கம் 1972இல் புதிய அரசியல் யாப்பை வரைந்து, பிரித்தானிய முடியரசுடன் இருந்த தொடர்பை அறுதியும் இறுதியுமாக அறுத்துக்கொண்டு இலங்கையை ஒரு குடியரசு நாடாகப் பிரகடனம் செய்தது. இந்த நிகழ்வானது பிரித்தானிய காலனித்துவவாதிகளை சீற்றத்துக்குள்ளாக்கியது. அவர்கள்

இலங்கை அரசுக்கு எதிராகப் பல்வேறு சூழ்ச்சி நடவடிக்கைகளில் இறங்கினர். குறிப்பாக, அந்த அரசியல் அமைப்பில் முன்னைய சோல்பரி அரசியல் அமைப்பில் சிறுபான்மை இனங்களுக்குப் பாதுகாப்புக்கென இருந்த 28ஆவது சரத்து நீக்கப்பட்டதையும், பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கப்பட்டதையும் எதிர்த்த, பிரித்தானியருக்கு ஆண்டாண்டு காலமாக விசுவாசிகளாக இருந்துவந்த தமிழ் பிற்போக்கு – இனவாத சக்திகளை பயன்படுத்தி பிரிவினைப் போராட்டத்தைத் தூண்டிவிட்டனர்.

அதன்பின்னர் பிற்போக்கு சக்திகள் வேறொரு தந்திரோபாயத்தை வகுத்தன. சிறீமாவோவுக்கு தனது மகன் அனுர மீது அளவுகடந்த பிரியம் என்பதைக் கண்டுகொண்ட பிற்போக்கு சக்திகள், அனுரவைத் தமது கையில் போட்டுக் கொண்டன. முதலில் அனுர மூலம் அவரது மூத்த சகோதரியான சுனேத்ரவின் கணவர் குமார் ரூபசிங்க மீது அரசியல் தாக்குதல் தொடுக்கப்பட்டது. அந்த நேரத்தில் குமார் ரூபசிங்க சிறீ.ல.சு.கவிலிருந்த இடது ஆதரவுச் சக்திகளின் குரலாக சிங்களத்தில் 'ஜனவேகய' என்ற பத்திரிகையையும், தமிழில் 'ஜனவேகம்' என்ற பத்திரிகையையும் நடாத்தி வந்தார். அவரது பத்திரிகையில் சிறீமாவோ அரசின் சில நடவடிக்கைகள் பற்றி வந்த விமர்சனங்களை வைத்துக்கொண்டு, அவரை அரச விரோதியாகப் படம்பிடித்து, அரசிலிருந்து தள்ளி வைப்பதில் அனுரவைப் பயன்படுத்தி பிற்போக்கு சக்திகள் பெற்றி பெற்றன.

அதேபோல, சிறீமாவோவின் இளைய மகள் சந்திரிகவின் கணவரான விஜேகுமாரதுங்க இடதுசாரி ஆதரவாளர் என்றபடியால், அவருக்கும் அனுரவுக்கும் மோதலை உண்டாக்கி, அவரை சிறீ.ல.சு.கவை விட்டு விலகிச் செல்ல வைப்பதில் பிற்போக்கு சக்திகள் வெற்றிபெற்றன. அதனால் விஜேகுமாரதுங்க விலகிச் சென்று தனியாக 'சிறீலங்கா மக்கள் கட்சி' என்ற புதிய கட்சியை உருவாக்கினார். சந்திரிகவும் தனது கணவரின் கட்சியில் இணைந்து கொண்டார். (விஜேகுமாரதுங்கவை ஜே.வி.பியினர் சுட்டுப் படுகொலை செய்த பின்னரும், அனுர ஐ.தே.கவில் சேர்ந்த பின்னரும்தான், சந்திரிகவை தனது வாரிசாக சிறீமாவோ சிறீ.ல,சு.கவுக்குள் மீண்டும் கொண்டு வந்தார். சந்திரிக போன்று கட்சியை விட்டு விலகிச் சென்று திரும்பிவந்த வரலாறு வேறு எந்தவொரு சிறீ.ல.சு.க. சிரேஸ்ட தலைவருக்கும் கிடையாது)

அதுமாத்திரமின்றி, அன்று உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட உணவு நெருக்கடியைப் பயன்படுத்தி அரசை வீழ்த்துவதில் ஐ.தே.க. முனைப்புடன் செயல்பட்டது. உணவு நெருக்கடியைத் தீர்ப்பதற்கு உள்ளூரில் உற்பத்தியைப் பெருக்குவதற்கான திட்டமொன்றை அரசின் பங்காளிக் கட்சிகளான இடதுசாரிக் கட்சிகள் முன்வைத்து செயல்படுத்த முனைந்தன. தற்காலிகமாக மக்களுக்கு கஸ்டங்கள் ஏற்பட்டாலும், அந்தத் திட்டம் வெற்றிபெற்றால் இலங்கை ஏகாதிபத்திய நாடுகளில் தங்கிநிற்கும் நிலை மாறியிருக்கும். ஆனால் மக்களின் உடனடி எதிர்ப்பைக் காரணம்காட்டி சிறீ.ல.சு.கவிலிருந்த வலதுசாரிகளான பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கவும், அனுர பண்டாரநாயக்கவும் அந்தத் திட்டத்தை எதிர்த்தனர்.




அவர்களின் கை வலுவாக ஓங்கியதால், பிரதமர் சிறீமாவோவினாலும் ஒன்றும் செய்ய முடியாமல் போய்விட, இடதுசாரிக் கட்சிகள் அரசிலிருந்து வெளியேற வேண்டிய நிர்ப்பந்தச் சூழல் ஏற்பட்டது. அதன் காரணமாக, பின்னர் 1977இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் சிறீ.ல.சுகவும், இடதுசாரிக் கட்சிகளும் தனித்தனியாகப் போட்டியிட்டன. அந்தச் சூழல் ஐ.தே.கவுக்கு பெரும் வரப்பிரசாதமாக அமைந்து, அக்கட்சி அத்தேர்தலில் ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் அமோக வெற்றியீட்டியது. முதல் தடவையாக இலங்கையின் மிகப்பெரிய அரசியல் குள்ளநரியான ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையில் ஐ.தே.க. அரசு அமைந்தது.

ஜே.ஆர்., ஐ.தே.கவின் பரம வைரிகளான இடதுசாரிக் கட்சிகளையும், தொழிற்சங்கங்களையும் திட்டமிட்டு அழிக்கும் நடவடிக்கையை மேற்கொண்டார். சிறீ.ல.சு.வை வேறொரு முறையில் அழிக்கத் திட்டமிட்டார். முதலில் இப்பொழுது அவரது மருமகனான ரணில் விக்கிரமசிங்க கூறுவதுபோல, முழு நாடாளுமன்றத்தையும் அரசாக மாற்றப்போவதாகக் கூறிக்கொண்டு, சிறீ.ல.சு.கவையும் அரசுடன் சேரும்படி அழைப்பு விடுத்தார். (அந்தத் தேர்தலில் எதிர்பாராத விதமாக எதிர்க்கட்சி அந்தஸ்தைப் பெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணி, இன்று சம்பந்தன் தலைமையிலான தமிழ் தேசியக் கூட்டமைப்பு செய்வதுபோல, உண்மையான எதிர்க்கட்சியாகச் செயல்படாமல் ஜே.ஆர். அரசுக்குச் சார்பாகச் செயல்படத் தொடங்கியிருந்தது) அவ்வாறு அக்கட்சி அரசுடன் இணைந்தால், சிறீமாவோவுக்கு வெளிநாட்டு அமைச்சர் பதவி தருவதாக ஜே.ஆர். ஆசைவார்த்தை காட்டினார். ஆனால் சிறீமாவோவும், சுதந்திரக் கட்சியும் ஜே.ஆரின் ஆசை வார்த்தையை முற்றுமுழுதாக நிராகரித்துவிட்டனர்.

அதன்பின்னர், பழிவாங்கும் நோக்குடன் சிறீமாவோவின் குடியியல் உரிமையைப் பறித்து, சுதந்திரக் கட்சியை முடக்க முயன்றார். ஆனால் மக்கள் சிறீ.ல.சு.கவினதும், இடதுசாரிக் கட்சிகளினதும் பக்கம் இருந்ததால், அக்கட்சிகளின் கூட்டான மக்கள் முன்னணியை 1994இல் ஆட்சிக்குக் கொண்டுவந்து, ஐ.தே.கவின் 17 வருட கொடுங்கோல் ஆட்சிக்கு முடிவு கட்டினர். இருந்தும் மக்கள் ஆதரவு பெற்ற அரசுக்கு எதிரான சதி, நாச வேலைகளை ஐ.தே.க. கைவிடவில்லை. அவர்கள் சர்வதேச பிற்போக்கு சக்திகளுடனும், தமிழ் பிரிவினைவாத பாசிசப் புலிகளுடனும் கள்ளக்கூட்டுச் சேர்ந்து தமது வேலைகளைத் தொடர்ந்து செய்து வந்தனர்.

பொதுவாக ஐ.தே.கவின் வரலாற்றை எடுத்துப் பார்த்தால், அந்தக் கட்சி சிங்களப் பேரினவாதத்தை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தி வந்ததை அவதானிக்கலாம். 1994இல் ஆட்சிக்கு வந்த சந்திரிகவின் ஆட்சியிலும் அதை ஒருமுறை பிரயோகித்திருக்கின்றனர். 2000ஆம் ஆண்டில் இனப்பிரச்சினைத் தீர்வுக்காக சந்திரிக அரசு கொண்டுவந்த 'தீர்வுப் பொதி'யை முறியடிப்பதில் ஐ.தே.க. சகல சிங்கள — தமிழ் இனவாத சக்திகளையும் ஓரணியில் திரட்டி வெற்றி கண்டது. ஐ.தே.கவின் இந்த நடவடிக்கையின் போது மீண்டும் ஒருமுறை சிறீ.ல.சு.கவில் இருந்த வலதுசாரி அணியினர் நாடாளுமன்றத்தில் எதிரணிக்குத் தாவி அந்தத் தீர்வுத்

திட்டத்தை முறியடிப்பதற்கு உதவினர்.

இருந்தும் இலங்கை மக்களின் ஐ.தே.க. எதிர்ப்பு உணர்வு காரணமாக, 2015 ஜனவரி 8ஆம் திகதி வரை ஐ.தே.கவால் ஆட்சியைக் கைப்பற்ற முடியவில்லை. இந்த நிலைமையில்தான் சர்வதேச பிற்போக்கு சக்திகள் புதிய உத்தியொன்றை வகுத்தன. அதாவது சிறீ.ல.சுவிலேயே ஒரு பலம்வாய்ந்த அணியினரை உடைத்தெடுத்து, அக்கட்சிக்கு எதிராகச் செயல்பட வைத்தனர். அதன்படி, அக்கட்சி சார்பில் முன்னாள் ஜனாதிபதியாக இருந்தவரும், சிறீ.ல.சு.கவை ஸ்தாபித்த பண்டாரநாயக்கவின் மகளுமான சந்திரிகவையும், கட்சியின் பொதுச் செயலாளராகவும், சிரேஸ்ட அமைச்சராகவும் இருந்த மைத்திரிபால சிறிசேனவையும் பிரித்தெடுத்து, ஐ.தே.கவுடன் கூட்டுச்சேர வைத்து ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வைத்து வெற்றியீட்டினர்.

மிகக் குறைந்த வாக்கு வித்தியாசத்தில் கட்சியை விட்டோடிய மைத்திரி வெற்றியீட்டியபோதிலும், அந்த வெற்றியை வைத்து இதுவரை காலமும் சிறீ.ல.சு.க. தலைமையிலான முற்போக்கு அரசுகள் ஈட்டிய மக்கள் சார்பான வெற்றிகள் அத்தனையையும் இன்றைய மைத்திரி – ரணில் அரசு குழிதோண்டிப் புதைக்க முற்படுவதுடன், கட்சியின் துரோகிகள் சிறீ.ல.சு.கவின் தலைமையையும் கைப்பற்றி, உண்மையான கட்சி விசுவாசிகளை ஓரம்கட்டிவிட்டு, கட்சியை ஐ.தே.கவின் ஒரு வாலாக மாற்றும் நடவடிக்கையிலும் இறங்கியுள்ளனர்.

ஆனாலும், உண்மையான சிறீ.ல.சு.க. விசுவாசிகளும், நாட்டுப்பற்று உள்ள மக்களும், ஐ.தே.கவினதும், சிறீ.ல.சு.கவின் துரோகிகளினதும் இந்தச் சதி நடவடிக்கைகளை முறியடித்தே தீருவர் என்பது திண்ணம். ஏனெனில், வரலாற்றை எடுத்துப் பார்த்தால், சிறீ.ல.சு.கவுக்குள்ளிருந்தும், வெளியிலிருந்தும், அக்கட்சியை அழிக்க எடுத்த அத்தனை முயற்சிகளும் தோல்வியிலேயே முடிந்திருக்கின்றன.

இன்றைய சூழல் சற்று வித்தியாசமாக, அதாவது ஐ.தே.கவும், சிறீ.ல.சு.கவின் வலதுசாரிப் பிரிவும் இணைந்து அரசாங்கம் ஒன்றை அமைத்திருப்பதாலும், அந்த அரசுக்கு சர்வதேச பிற்போக்கு சக்திகள் பிராணவாயு ஏற்றிக் கொண்டிருப்பதாலும், தேசப்பற்றுள்ள மக்களுக்குச் சற்றுப் பாதகமான சூழ்நிலை நிலவினாலும், இன்றைய ஏகாதிபத்திய சார்பு, மக்கள் விரோத அரசு தூக்கியெறியப்படுவதும், சிறீ.ல.சு.க. உண்மையான வாரிசுகளுக்கு மீண்டும் கிடைப்பதும், அவர்களும் இடதுசாரிகளும் ஏனைய ஜனநாயக மற்றும் தேசபற்றுள்ள சக்திகளும் இணைந்து மீண்டும் மக்கள் சார்பு அரசொன்றை அமைப்பதும் யாராலும் தவிர்க்க முடியாத வரலாற்று நியதியாகும்.

*

# உள்ளூராட்சித் தேர்தல்களை நடாத்த அஞ்சும் அரசு!

நாட்டின் பல உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலம் முடிவடைந்துவிட்ட நிலையில், அவை அரசாங்கம் நியமித்த விசேட அதிகாரிகளால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. அதன் காரணமாக நாட்டின் நிர்வாகக் கட்டமைப்புகளில் சாதாரண மக்கள் பங்கு பெறும் வாய்ப்பு மறுக்கப் பட்டிருக்கின்றது.

உள்ளூராட்சி சபைகளின் தேர்தல்களைக் காலதாமதம் இன்றி நடத்தும்படி ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினர் பல தடவைகள் வலியுறுத்தியும், அரசு அதைப் புறக்கணித்து வருகிறது. அந்தத் தேர்தல்களை நடாத்துவதற்கு ஒரு வருடத்துக்கு மேற்பட்ட கால அவகாசம் தேவை என அரசு சார்பில் கூறப்படுகிறது. அரசு தனது இழுத்தடிப்புக்குக் காரணமாக, உள்ளூராட்சி சபைகளின் எல்லை நிர்ணயம் இன்னமும் முடிவடையவில்லை எனக் காரணம் கற்பிக்க முனைகிறது.

ஆனால், உண்மையான காரணம் அதுவல்ல என அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகிறது. நாட்டு மக்களுக்கு 'நல்லாட்சி' செய்யப்போவதாக ஆட்சிக்கு வந்த மைத்திரி – ரணில் அரசு, நாட்டின் எந்தவொரு பிரச்சினையையும் தீர்க்கமுடியாமல் திண்டாடுவதால், தேர்தல் ஒன்றுக்காக மக்களின் முன்னால் செல்வதற்கு அஞ்சுவதே உண்மையான காரணம் என விடயமறிந்தவர்கள் கூறுகின்றனர்.

இன்னொரு காரணம், ஐ.தே.கவுடன் கூட்டு அரசியல் நடாத்தும் ஜனாதிபதி மைத்திரி தலைமையிலான சிறீ.ல.சு.கவின் ஒரு பிரிவினர், கட்சியை முழுமையாகத் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்காக கடந்த ஒரு வருடமாக எடுத்த முயற்சிகள் கைகூடாததால், தேர்தலுக்கு முகம் கொடுக்க அஞ்சுகின்றனர். ஏனெனில், சில நாட்களுக்கு முன்னர் நீர்கொழும்பில் மகிந்த ராஜபக்ச அணியினர் நடாத்திய உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் மாநாட்டில், மொத்தமுள்ள சிறீ.ல.சு.க. உள்ளூராட்சி உறுப்பினர்களான 1,435 பேரில் 34 பேரைத்தவிர, 1,401 உறுப்பினர்கள் பங்குபற்றி மகிந்தவுக்குத் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர். இது மைத்திரி அணியை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

இந்த நிலைமையில், அண்மையில் கொழும்பில் ஊடகவியலாளர் மாநாடொன்றை நடாத்திய இடதுசாரிக் கட்சிகளின் கூட்டமைப்பு, உள்ளூராட்சித் தேர்தல்களைக் காலதாமதம் இன்றி நடத்தும்படி அரசை வலியுறுத்தியுள்ளது. இம்மாநாட்டில் உரையாற்றிய கம்யூனிஸ்ட் கட்சி பொதுச்செயலாளர் டியு.குணசேகர,

"ஐக்கிய தேசியக் கட்சிக்கும் அரசில் அங்கம் வகிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினருக்கும் இடையிலான இழுபறியே தேர்தல் நடாத்தாமைக்குக் காரணம்" எனக் குற்றஞ்சாட்டினார்.

லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண பேசும்போது,

"கடந்த அரசாங்க காலத்தில் எல்லாத் தேர்தல்களும் உரிய காலத்தில் நடாத்தப்பட்டன. ஜனநாயகம் பேசும் இன்றைய அரசு உள்ளூராட்சித் தேர்தல்களையே நடாத்தாமல் இழுத்தடிக்கிறது" எனக் குறிப்பிட்டார்.

*

# காலமானார்கள்!

## நாடகக் கலைஞர் கலாபூசணம் எஸ்.ரி.அரசு

யாழ்ப்பாணம் முத்திரைச்சந்தியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முதுபெரும் நாடக மற்றும் புகைப்படக் கலைஞர் கலாபூசணம் எஸ்.ரி.அரசு (சிவக்கொழுந்து திருநாவுக்கரசு) 17–02–2016 அன்று யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அரசு தமது இளம் வயதில் அந்தக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் பிரபலமாக இருந்த 'செல்லம்ஸ் ஸ்ரூடியோ'வில் இணைந்து புகைப்படப் பயற்சி பெற்று பின்னர் அந்தத்துறையில் தேர்ந்த கலைஞரானார். அத்துடன் வடபகுதியில் செயற்பட்ட பல நாடகசபாக்களில் இணைந்து பல நாடகங்களில் நடித்து அனுபவமிக்க கலைஞராகவும் மிளிர்ந்தார். அவருடைய கலைச்சேவையைக் கௌரவித்து அவருக்கு அரசால் 'கலாபூசணம்' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## எழுத்தாளர் செங்கை ஆழியான்

இலங்கையின் பிரபல தமிழ் எழுத்தாளர்களில் ஒருவரும், உதவி அரசாங்க அதிபர், யாழ்.பல்கலைக்கழகப் பதிவாளர், மாநகர விசேட ஆணையாளர் போன்ற அரச உயர் பதவிகளையும் வகித்த 'செங்கை ஆழியான்' என்ற புனைபெயர் கொண்ட கந்தையா குணராசா, நீண்டகால சுகவீனத்தின் பின்னர் 28–02–2016 அன்று தமது 75ஆவது வயதில் யாழ்ப்பாணத்தில் காலமானார். செங்கை ஆழியான் பல ஜனரஞ்சகமான நாவல்களையும், சிறுகதைகளையும் எழுதியதுடன், பாடசாலை மாணவர்களுக்கான புவியியல் மற்றும் வரலாற்று நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

ஈழத்துத் தமிழ் இலக்கியப் பரப்பில் 50களில் தொடங்கி சுமார் நான்கு தசாப்த காலம் கோலோச்சிய முற்போக்கு இலக்கியம், மரபு இலக்கியம் என்ற இரு போக்குகளில், மரபு இலக்கியத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய 'யாழ்.இலக்கிய வட்டம்' என்ற அமைப்பின் முக்கிய நிர்வாகிகளில் செங்கை ஆழியானும் ஒருவராவார் என்பது குறிப்பிடத்தக்கது.

## திருமதி. மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம்

இலங்கைத் தமிழரசுக் கட்சி மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி என்பனவற்றின் முன்னாள் தலைவரும், முன்னாள் இலங்கைப் பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் அவர்களின் துணைவியாரும், தனது கணவருடன் இணைந்து தீவிரமான அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டவருமான திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், 2016 மார்ச் 07அம் திகதி லண்டனில் காலமானார்.

அவரது கணவர் அ.அமிர்தலிங்கம் 'வளர்த்தகடா மார்பில் பாய்ந்த கதை'யாக புலிகளால் அவரது 61ஆவது வயதில் 1989ஆம் ஆண்டு யூலை 13ஆம் திகதி கொழும்பில் வைத்து படுகொலை செய்யப்பட்ட பின்னர், திருமதி மங்கையர்க்கரசி லண்டனுக்குப் புலம்பெயர்ந்து தனது புதல்வர்களுடன் வாழ்ந்து வந்தார். அந்நிலையிலேயே திடீரென ஏற்பட்ட நோய்த் தாக்கம் காரணமாகத் தனது 83ஆவது வயதில் மரணமடைந்துள்ளார்.

முன்பக்கத்தொடர்ச்சி...

நிலையில், இந்தியாவிலுள்ள தனிப்பட்ட கம்பனிகள் இலங்கையில் அம்புலன்ஸ் சேவை நடாத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (அண்மையில் கூடிய தென் மாகாண அம்புலன்ஸ் சேவையாளர் சங்க வருடாந்த மாநாட்டில், தமது மாகாணத்தில் இந்திய அம்புலன்ஸ் சேவை நடைபெற அனுமதிக்கப் போவதில்லை என அச்சங்கம் பகிரங்கமாக அறிவித்துள்ளது)

இதுதவிர, இந்தியாவின் தமிழகக் கரைக்கும், இலங்கையின் தலைமன்னாருக்கும் இடையில் தரைவழித் தொடர்பை ஏற்படுத்துவதற்காக பாலம் அமைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது வெறுமனே இரு நாடுகளுக்குமிடையிலான போக்குவரத்தை இலகுபடுத்துவதற்காக என்று காரணம் கூறப்பட்டாலும், இதன் பின்னணி என்னவென்பதை ஊகிப்பது ஒன்றும் சிரமமான காரியம் அல்ல. இந்தியாவின் பொருளாதார ஆதிக்கம் இலங்கையில் கட்டுப்பாடின்றி ஏற்படப்போகும் சூழலில், இந்தியர்களுக்கு தாம் நினைத்தபடி இலங்கைக்கு வந்து போவதற்கு ஒரு இலகுவான வழி தேவையல்லவா? (பிரித்தானிய காலனித்துவவாதிகள் இலங்கையைக் கைப்பற்றியதும் முதலில் செய்த வேலை, நெடுஞ்சாலைகளையும் புகையிரதப் பாதைகளையும் அமைத்தது ஏன் என்பதைப் புரிந்துகொண்டால், இந்தியர்களின் பாலத் திட்டத்தையும் புரிந்து கொள்ளலாம்)

இந்த இடத்தில் ஒரு விடயத்தை ஞாபகப்படுத்துவது அவசியம். 2002இல் சந்திரிக குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்த காலத்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஐ.தே.க. வெற்றி பெற்று ரணில் பிரதமரானார். பிரதமரானதும் அவர் செய்த முதல் வேலை, நோர்வேயின் (மேற்கின்) ஆலோசனையுடன் புலிகளுடன் சமாதான உடன்படிக்கை செய்தது. அடுத்ததாகச் செய்ய இருந்தது, மேற்கின் ஆலோசனையுடன் இந்தியாவின் தமிழகத்தையும், இலங்கையின் வடக்கு கிழக்கையும் ஒரே பொருளாதாரப் பிராந்தியமாக இணைத்து 'அபிவிருத்தி' செய்வது. ஆனால், சந்திரிக நாட்டின் நலன்கருதி ரணிலின் அரசைக் கலைத்ததால், ரணிலினதும், அவரது மேற்கத்தைய எஜமானர்களினதும் திட்டம் தவிடு பொடியாய்ப்போனது.

ஆனால், தற்போதைய நிலைமை மிகவும் வித்தியாசமானது. மேற்கு நாடுகளும், இந்தியாவும் முயற்சி செய்து இலங்கையில் சுமார் 20 வருடங்களாக ஆட்சியில் இருந்த ஏகாதிபத்திய — எதிர்ப்பு, தேசபக்தி அரசைத் தேர்தலில் தோற்கடித்து, தமக்குச் சேவகம் செய்யக்கூடிய அரசொன்றை ஆட்சிக்குக் கொண்டு வந்துள்ளனர். அந்த அரசில்

வரலாற்றில் முதல் தடவையாக, வலதுசாரிப் பிற்போக்குக் கட்சியான ஐ.தே.கவுடன், அதன் பரம வைரியான சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு பிரிவினரும் இணைத்து வைக்கப்பட்டிருக்கின்றனர். இந்த அரசின் பாதுகாவலர்களாக சிறீ.ல.சு.கவின் ஸ்தாபகர்களாகவும், வழிநடத்துனர்களாகவும் இருந்த எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கவினதும் அவர் மனைவி சிறீமாவோவினதும் புதல்வியும், முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிக குமாரதுங்க ஒருபுறமும், நீண்டகாலம் அக்கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவராகவும் இருந்த மைத்திரிபால சிறிசேன மறுபுறமும் இருக்கின்றனர்.

முன்னைய மகிந்த ராஜபக்ச அரசு மனித உரிமைகளை மீறிச் செயற்பட்டு வருகின்றது எனக் காரணம் சொல்லியே அதை வீழ்த்திவிட்டு இன்றைய அரசை மேற்கத்தைய சக்திகளும், இந்தியாவும் பதவிக்குக் கொண்டு வந்திருந்தாலும், அந்தக் காரணம் மட்டும் உண்மை அல்ல என்பது எல்லோருக்கும் தெரியும். இலங்கை சோசலிச சீனாவுடன் நெருங்கிச் செல்வதைத் தடுத்து, இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தமது இராணுவ மூலோபாயத்துடன் இலங்கையை இணைப்பதே அவர்களின் நோக்கமாக இருந்தது.

அந்த உண்மையை, இன்றைய மைத்திரி — ரணில் அரசு ஆட்சிக்கு வந்தபின்னர் நடைபெற்று வரும் நிகழ்ச்சிகள் துலாம்பரமாக எடுத்துக் காட்டுகின்றன. கடந்த ஒரு வருட காலத்தில் அடுக்கடுக்காக இலங்கைக்கு வந்து சென்ற அமெரிக்க மற்றும் ஐரோப்பிய இராஜதந்திரிகளின் தொகை இலங்கையில் முன்னொருபோதும் இல்லாதது. அதுமாத்திரமின்றி, இலங்கையின் வெளிவிவகார அமைச்சரான மங்கள சமரவீர, இலங்கையில் இருக்கும் நாட்களைவிட, அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் இருக்கும் நாட்களே அதிகமாக இருக்கிறது.

முன்பு ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஜனாதிபதியாக இருந்த காலத்தில் வெளிவிவகார அமைச்சராக இருந்த ஏ.சி.எஸ்.ஹமீத் பற்றி ஒரு நகைச்சுவைக் கதை சொல்லப்படுவதுண்டு. அவர் இலங்கையில் சலவைச் செலவு குறைவு என்பதற்காகத் துணிகளை வெளுப்பற்கு மட்டும்தான் இலங்கைக்கு வருவதுண்டு என்று சொல்லப்படுவதுண்டு. ஹமீத் உலகத்தைச் சுற்றிச்சுற்றி வந்தாலும், இறுதியில் ஜே.ஆர். அரசு உலக அரங்கில் தனிமைப்பட்டுப்போனதுதான் நடந்தது. அந்த நிலைமை நமது தற்போதைய வெளிவிவகார அமைச்சர் மங்களவுக்கும் நடக்குமோ என எண்ணத் தோன்றுகிறது.

இன்றைய இலங்கை அரசாங்கம் இந்தியாவுக்கு நிலபாவாடை விரிப்பது ஒன்றும் இருநாட்டு நலன்சார்ந்த நடவடிக்கை அல்ல. முன்னொருபோதும் இல்லாத வகையில் இலங்கையை இந்தியாவின் நவ காலனியாதிக்கத்தின் கீழ் கொண்டு வருவதற்கான பாரிய முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது என்பதுான் உண்மை. தம்மைப் பதவிக்குக் கொண்டு வருவதற்கு உதவியதற்கான நன்றிக்கடனாக மைத்திரி — ரணில் அரசு இந்தியாவுக்காக இவ்வாறெல்லாம் செயற்படுகின்றது என்பதே உண்மை. இதன் பின்னணியில் இந்தியா மட்டும் தனியாக இல்லை என்பது இன்னொரு முக்கியமான விடயம்.

ஏனெனில், இந்தியாவில் மோடி தலைமையிலான இந்துத்துவ பாரதீய ஜனதா வலதுசாரி அரசைப் பதவிக்குக் கொண்டு வருவதிலும் இதே மேற்கத்தைய சக்திகள்தான் முக்கிய பங்கு வகித்தன. அதன் பின்னர் இந்தியா ஆசியாவில் மேற்கத்தைய சக்திகளின் இளைய கூட்டாளியாக மாறியது. இப்பொழுது அதேசக்திகளால் இலங்கை இந்தியாவின் இளைய கூட்டாளியாக மாற்றப்படவுள்ளது.

சில நாட்களுக்கு முன்னர் அமெரிக்கத் தலைநகர் வொசிங்டனில் அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையில் நடைபெற்ற மூலோபாயப் பேச்சுவார்த்தையின் பின்னர் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில், இலங்கை தென்கிழக்காசிய நாடுகளுடனும் தென்னாசிய நாடுகளுடனும் இணைந்து இந்தோ — பசுபிக் பொருளாதாரக் பாதையுடன் (Indo – Pacific Economic Corridor) இணைய வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. இத்தகைய ஒரு மூலோபாயப் பேச்சுவார்த்தையை அமெரிக்கா 2013இல் இந்தியாவுடன் நடாத்தியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இந்தத் திட்டம் நாற்பதுக்கும் மேலான நாடுகளை இணைக்கும் சீனாவின் மிகப்பெரிய ‘பட்டுப்பாதை’ (Silk Road) திட்டத்துக்கு எதிராகவே ஆரம்பிக்கப்பட்டது என்பது தெளிவானது.

அதுமட்டுமின்றி, தமது திட்டத்தின் அடிப்படையில், ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் போடப்படவுள்ள பாலத்தையும் நடைமுறைப்படுத்த ஒத்துழைக்கும்படி இலங்கையை அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது என ‘நியு இந்தியன் எக்ஸ்பிரஸ்’ பத்திரிகை அண்மையில் எழுதியுள்ளது. இவையெல்லாம் தற்செயல் நிகழ்ச்சிகள் அல்ல.

இந்தியா, இலங்கையின் மிகவும் அயலிலுள்ள நட்பு நாடு. இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் வரலாறு கொண்டது. இந்தியா பிரித்தானியரிடம் இருந்து போரடிப் பெற்ற சுதந்திரமே, போராடாத இலங்கைக்கும் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்தது. மறுபக்கத்தில் இலங்கையும் இந்தியாவும் இரண்டு வெவ்வேறான சுதந்திரமும் சுயாதிபத்தியமும் இறைமையும் கொண்ட நாடுகள். ‘தாயும் பிள்ளையும் ஒன்றென்றாலும், வாயும் வயிறும் வேறல்லவா?’ என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

இலங்கையின் சில சிங்களப் பேரினவாதிகள் (ஜே.வி.பி. உட்பட) கடந்த காலத்தில் கூச்சலிட்டது போல, நாமும் இந்திய எதிர்ப்புக் கூச்சலிட முடியாது. இந்தியாவுடனான எமது உறவு அயலவர்கள் என்ற முறையில் முன்னுரிமையானது. ஆனால் அதேநேரத்தில் அது சமத்துவமாகவும் இருக்க வேண்டும். பெரியண்ணன் – சின்னத்தமபி உறவாக அது இருக்க முடியாது.

அப்படிப் பார்க்கையில் தற்பொழுது இலங்கை அரசுக்கும் இந்திய அரசுக்கும் இடையில் மேற்கொள்ளப்படவுள்ள சகல ஒப்பந்தங்களும் அசமத்துவமானவையாகவும், இலங்கையை இந்தியாவின் நவ காலனியாக்குபவையாகவும், மேற்கு நாடுகளின் இராணுவ நோக்கங்களுடன் இலங்கையை இணைப்பனவாகவும் இருப்பதை அவதானிக்க முடிகிறது. இது இலங்கையை தாய்வான், தென் கொரியா, பிலிப்பைன்ஸ் போன்ற ஏகாதிபத்தியப் பொம்மை அரசுகள் என்ற ஒரு நிலைக்கு இட்டுச் செல்லலாம். எனவே இந்தியாவுடன் எந்தவிதமான உடன்படிக்கையை மேற்கொண்டாலும், அதன் பின்னணியில் மறைந்து கிடக்கும் கண்ணிகள் என்னவென்பதை கவனமாக ஆராய்ந்து பார்ப்பது அவசியம்.

அவ்வாறில்லாவிட்டால், இலங்கை மிக நீண்டகாலம் அந்நிய ஆதிகத்திற்கு உட்பட்டு, தன் சுதந்திரத்தை இழந்து நிற்கும் அவல நிலைக்கு உள்ளாகலாம். *

# நல்லாட்சியின் பெயரால் விவசாயிகளின் வயிற்றில் அடிக்கும் அரசு!

தற்போதைய மைத்திரி – ரணில் அரசு 2015 ஜனவரி 08இல் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபொழுது, முன்னைய மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசின் ஊழல், மோசடி, அதிகாரத் துஸ்பிரயோகம், ஜனநாயக உரிமைகள் மீறல் என்பவற்றுக்கு முடிவுகட்டி, நாட்டில் தேனும் பாலும் ஓடவைக்கப்போவதாக மக்களுக்கு வாக்குறுதி அளித்துத்தான் பதவி ஏற்றது.

ஆனால் ஆட்சிக்கு வந்து ஒருவருட காலத்தில் எந்தவிதமான புதிய அபிவிருத்தித் திட்டங்களும் ஆரம்பிக்கப்படாததுடன், முன்னைய அரசால் ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களும் நிறுத்தப்பட்டன. புதிய வேலைவாய்ப்புகளும் உருவாக்கப்படவில்லை. தோட்டத் தொழிலாளர்கள் உட்பட தனியார்துறை ஊழியர்களுக்கு வாக்குறுதி அளித்தபடி 2,500 ரூபா சம்பளவுயர்வு இன்றுவரை வழங்கப்படாததுடன், அதற்கான முயற்சிகள் கூட எடுக்கப்படவில்லை. பதிலுக்கு உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற ஏகாதிபத்திய நிதிநிறுவனங்களின் ஆலோசனையை ஏற்று புதிய புதிய வரிகளை மக்கள் மீது அரசு சுமத்த ஆரம்பித்துள்ளது.

ஆனால், தனது கையாலாகாத்தனத்தாலும், மத்திய வங்கியின் தவறான பிணை முறி நடவடிக்கைகளாலும் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை மறைப்பதற்கு, எதற்கெடுத்தாலும் முன்னைய அரசாங்கத்தின் மீது குற்றத்தைச் சொல்லி மக்களைத் தவறாகத் திசைதிருப்பும் பிரயத்தனத்தில் அரசு ஈடுபட்டு வருகிறது.

இந்த அரசின் மிக மோசமான மக்கள் விரோத நடவடிக்கைகளில் ஒன்று விவசாயிகளுக்கு முன்னைய அரசால் வழங்கப்பட்டிருந்த உர மானியத்தை நீக்கியமையாகும். முன்னைய அரசாங்க காலத்தில் ஒரு மூடை பசளை மானிய அடிப்படையில் 350 ரூபாவுக்கு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

தற்போதைய மைத்திரி – ரணில் அரசு மானியத்தை நீக்கியதால் உரத்தின் விலை 10 மடங்காக அதிகரித்தது. இதனால் விவசாயிகள் அரசுக்கு எதிராகக் கொதித்தெழும் நிலை உருவானது.

விவசாயிகளின் எதிர்ப்பைச் சமாளிப்பதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலையிட்டு, உரத்தின் விலையை மூடையொன்றுக்கு 2,500 ரூபாவாக விலை நிர்ணயம் செய்தார். ஆனால் இதுவும் மிக அதிகமானது என்பதால் விவசாயிகள் இந்த விலை நிர்ணயத்தை ஏற்க மறுத்துள்ளனர். இந்த அரசைப் பதவிக்குக் கொண்டு வருவதில் முக்கியமான பங்கை வகித்த ஜே.வி.பியின் விவசாயிகள் சங்கம் அரசின் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, விவசாயிகளைத் திரட்டி, அவர்களைக் கோவணத்துடனும் மண்வெட்டியுடனும் ஊர்வலம் செல்ல வைத்துள்ளது. உர மானியத்தைத் திரும்பவும் வழங்காவிடில் வயல்கள் போர்க்களங்களாக மாறும் என ஜே.வி.பி. (புஸ்வாண) எச்சரிக்கை வேறு விடுத்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதமர் ரணிலும், நிதி அமைச்சர் ரவி கருணநாயக்கவும், புதிய புதிய பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொண்டு மக்களின் வயிற்றில் அடிப்பதும், அதற்கு அரசில் அங்கம் வகிக்கும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியினர் எதிர்ப்புத் தெரிவிப்பதும். அதைச் சமாளிக்க சுதந்திரக் கட்சித் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதி மைத்திரிபால தலையிட்டு சப்புக்கட்டுக் கட்டுவதும் நாளாந்த நிகழ்ச்சிகளாகிவிட்டன.

மறுபுறத்தில். எதிர்க்கட்சி அந்தஸ்தைப் பெற்றிருக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு, மக்கள் எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினைகள் பற்றி எந்தவிதமான அக்கறையும் இன்றி, அரசுக்குச் சாமரம் வீசி தமது தனிப்பட்ட தேவைகளை நிறைவேற்றுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கின்றது.

மக்கள் வீதிக்கு இறங்காமல் இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது என்பதையே, அரசின் நடவடிக்கைகளும், சம்பிரதாய எதிர்க்கட்சியின் செயல்பாடும் உணர்த்துகின்றன.

*

# ஃபிடல் கஸ்ட்ரோவை அவதூறு செய்த இனவாதி சம்பிக்க!

உலகில் யாரும் செய்யத் துணியாத ஒரு கேவலமான, அநாகரிகமான, முட்டாள்தனமான வேலையை, அதாவது மாபெரும் கியூப நாட்டினதும், உலகினதும், ஒப்பற்ற மகத்தான தலைவரான ஃபிடல் கஸ்ட்ரோவை அவமதிக்கும் வேலையை ,இலங்கையின் சிங்கள இனவாத ஹெல உருமய கட்சியின் தலைவரும், அமைச்சருமான சம்பிக்க ரணவாக்க செய்திருக்கிறார்.

அவர் அங்கம் வகிக்கும் மேற்கத்தைய சார்பான மைத்திரி – ரணில் அரசு, அமெரிகாவுக்கு காவடி தூக்கித் திரிவதை நியாயப்படுத்துவதற்காக, மைத்திரியையும், ரணிலையும் பார்த்து, அவர்களைப் பின்பற்றி, கியூபாவின் தலைவர் ஃபிடல், அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவுக்கு கியூபாவுக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளார் என சம்பிக்க சமீபத்தில் ஒரு நிகழ்ச்சியில் பேசும்போது திருவாய் மலர்ந்து தனது அதிமேதாவித்தனத்தைப் பகிரங்கப்படுத்தி இருக்கிறார்.

கியூபாவுக்கு எதிராக அமெரிக்கா 55 வருடங்களுக்கு மேலாக விதித்திருந்த பொருளாதாரத் தடைகளும், இதர தடைகளும் படுதோல்வியைச் சந்தித்த நிலையில், அமெரிக்கா தானாக முன்வைந்து கியூபாவுடன் உறவுகளைப் புதுப்பித்துக் கொண்டதையும், ஏகாதிபத்திய விசுவாசம் காரணமாக மைத்திரி – ரணில் அரசு ஏகாதிபத்திய சக்திகளுக்கு வால்பிடிப்பதையும், ஒரே தராசில் வைத்துப் பார்க்கும் சம்பிக்க போன்ற சிங்களப் பேரினவாதத்தை வைத்து அரசியல் பிழைப்பு நடாத்துபவர்களிடம் இதைவிட வேறு எதையும் எதிர்பார்க்க முடியாதுதான்.

என்றாலும், சம்பிக்கவின் பேச்சு முட்டாள்தனமான அதிக பிரசிங்கித்தனம் என்றுதான் சொல்ல வேண்டும்.

இலங்கையின் 'அமெரிக்க யங்கி டிக்கி' எனப் 'புகழ்பெற்ற' கடைகோடி கம்யூனிச எதிர்ப்பு வலதுசாரி அரசியல்வாதியான ஜே.ஆர்.ஜெயவர்த்தன கூட, ஒருபோதும் வாய்தவறிக்கூட கியூபாவையோ, அதன் கஸ்ட்ரோவையோ, சம்பிக்க போலத் தூசித்தது கிடையாது.

*